
# நயினை நாகேஸ்வரி



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

அம்பாள் திருத்தேர் - வைர விழா விசேட வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புராதன சைவ ஆலயங்கள்

# நயினை நாகேஸ்வரி

குல.சபாநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : நயினை நாகேஸ்வரி

ஆசிரியர் : குல. சபாநாதன்

மொழி : தமிழ்

பதிப்புரிமை : 1962 எஸ். நித்தியக்கல்யாணி

பொருள் : சமயம்

பதிப்பு : நான்காம் பதிப்பு 2019 (புதிய புகைப்படங்கள் மற்றும் வடிவமைப்புடன்)


பக்கம் : X + 77 = 87

படிகள் : 1000

அச்சுப்பதிப்பு : விவேகானந்த அச்சகம் – யாழ்ப்பாணம்.

வெளியீடு : அறங்காவலர் சபை.
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
மூலஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

1) பதிப்புரை
2) அணிந்துரை
3) முன்னுரை

## முதற்பகுதி - கோயில் வரலாறு


| | பக்கம் |
|---|---|
| நாகேஸ்வரி அம்பாள் கோவில் வரலாறு | 1 |
| நாகம் அர்ச்சனை செய்தது | 2 |
| பழைய துறைமுகம் | 3 |
| சீனத்துச் சாடிகள் | 4 |
| மணிமேகலா சம்பந்தம் | 5 |
| கோயிலை இடித்தல் | 6 |
| கோயில் புனரமைப்பு | 8 |
| இப்பொழுதுள்ள கோயில் அமைப்பு | 9 |
| விமான புனரமைப்பு | 11 |
| தியானம் செய்வதற்கு ஏற்ற ஆலயம் | 14 |
| ஆலயப் பூசையும் விழாவும் | 15 |
| ஆலய நிர்வாகம் | 16 |
| அம்பிகையின் அருள் ஒழுகு வடிவம் | 16 |
| அம்பாள் அலங்காரத் தேரில் வீற்றிருக்கும் அற்புதக் காட்சி | 20 |
| புதிய தேர் | 21 |
| சித்திரத் தேரின் வெள்ளோட்டமும் மலர் வெளியீடும் | 25 |
| தேரின் உறுப்புக்கள் | 26 |
| அம்பாள் அருள் பாலிக்கும் திறன் | 36 |
| தீர்த்தோற்சவம் | 37 |
| தெற்போற்சவம் | 38 |
| பாமாலை சூட்டிய பாவலர் | 39 |
| **இரண்டாம் பகுதி** | |
| தோத்திரத் திரட்டு | 42-60 |
| **மூன்றம்பகுதி** | |
| புகைப்படத் தொகுப்பு | 61-69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நயினாதீவுக்கு நந்தா புகழைத் தருவது ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். " அகிலாண்டா கோடியீன்ற அன்னையே, பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே" எனத் தாயுமானவர் போற்றிப் பரவிய அன்னை கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்களுள் வட இலங்கையிலுள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. அறுபத்துநான்கு சக்தி பீடங்களுள் மணித்ததீவில் புவனேஸ்வரி பீடமென்று போற்றப்படுவதும் இத்திருத்தலமேயாகும்.

இத்தெய்வீக திருத்தலத்தின் வரலாற்றினை," இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நயினை நாகேஸ்வரி" எனும் பெயரில் யாழ்ப்பாணம் கரம்பொன்னைச் சேர்ந்த முதலியார் குல.சபாநாதன் அவர்கள் 1962 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டுள்ளார். குமரன் புத்தக இல்லத்தார் 2006 ஆம் ஆண்டில் இந்நூலினை மறுபதிப்பு செய்துள் ளார்கள்.

இந்நூல் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் பற்றி அறிந்து கொள்வதற்கு ஓர் அரிய கைநூலாகும். 1957ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் தேர் வரலாறு, அதிலுள்ள புராதன சிற்பங்களுள் முக்கியானவற்றின் புகைப்படங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலை எழுதிய குல.சபாநாதன் அவர்களே 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலரையும் எழுதிய பெருமைக்குரியவர். இவ்வாண்டு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேருக்கு அகவை ஆறுபதாண்டுகள் நிறைவுற்று வைரவிழா நடைபெறும் ஆண்டாக அமைகின்றது. இதனைக் கருதியே 08-07-2017இல் நடைபெறும் தேர்த் திருவிழாவில் அவர் எழுதிய " நயினை நாகேஸ்வரி" என்னும் நூல் வைரவிழாவின் விசேட வெளியீடாக வெளிவருகின்றது. இம்மீள்பதிப்பில் சில புதிய புகைப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் நூலின் வடிவமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆலயம் பற்றிய புதிய சில விபரங்கள் மட்டும் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. இவைதவிர உள்ளடக்க ரீதியாக எதுவித மாற்றங்களும் செய்யப்பட வில்லை. இந்நூலினை விரைவில் மீள் பதிப்புச் செய்து உதவிய யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகத்தாருக்கு என்றும் நன்றியுடையோம். இவ்வெளியீட்டில் இடம்பெறும் புகைப்படங்கள் சிலவற்றை வழங்கிய (நயினை எம்.குமரன்) மா.செந்தில்குமரனுக்கும் எமது நன்றி.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள்பாலிக்கும் திறன் மிகவும் அற்புதமானதாகும். இதனை அனுபவத்தில் கண்டவர்களே நன்கு உணரமுடியும். தனது ஆலயம் சம்பந்தமான திருத்தொண்டு எது வாயினும் சரி அதற்கு எவரை, எக்காலத்தில், எவ்விதத்தில் எப்படி அப்பெருமாட்டி ஆட்கொண்டு கருவியாக செயற்படுத்துவாள் என முன்கூட்டிச் சொல்லவோ, திட்டமிடவோ முடியாது என்று இல்லறஞானி நயினை. க. இராமச்சந்திரன் அவர்கள் இந்நூலின் அணிந்துரையில் குறிப்பிடுவது முழுவதும் உண்மையாகும்.இது நயினை நாகபூஷணி அம்மனின் தனிப்பெருங் கருணையாகும்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

25-06-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி ஆசிரியர்

உயர்திரு க.இராமச்சந்திரன் அளித்த

# அணிந்துரை

அன்னையைத் தெய்வமாக வழிபடும்முறை உலகெங்கினும் தொன்றுதொட்டு இருந்துவரும் ஓர் அருமையான வழக்கமாகும். அது எம்மொழியினருக்கும் எச்சமயத்தினருக்கும் பொதுவானதாகும். இன்று 12 இராசிகளுடன் கருதப்படும் இராசி மண்டலத்தில், முற்காலத்தில் எட்டு இராசிகளே கணிக்கப்பட்டன. வேதங்களில் முதலாவதான இருக்கு இந்தக் கணிப்பை ஏற்றுள்ளது. இந்த எட்டினுள் முக்கிய இடம்பெற்றது கன்னி இராசி ஆகும். நவராத்திரி பூசை நடப்பது கன்னி இராசியான புரட்டாதி மாதத்தில் என்பதை எல்லோரும் அறிவர். வானூல் சாஸ்திர ரீதியாகக் கிடைத்துள்ள இந்த உண்மை ஒன்றே தேவி வழிபாட்டின் தொன்மைக்குப் போதிய சான்றாகும்.

விஞ்ஞானம் மூலம் இயற்கையை அடக்கியாண்டு அணுவின் சக்தியை நாச வேலைக்கு உபயோகமாக்கி அல்லல்படும் நவீன உலகம் உய்ய வேண்டின் மறுபடியும் பராசக்தியைப் போற்றி வழிபட்டு அவள் கருணையை பேணி வாழ வேண்டுமென்ற கருத்துப்பட அண்மையில் ஓர் அரிய பெரிய ஆராய்ச்சி நூல் (The return of the Goddess) உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரான திருமதி ரைசன் ஆங்கில அம்மையாரால் வரையப்பட்டுள்ளது.

ஈழத்தைப் பொறுத்தமட்டில், நமது சைவ சமயத்தைச் சார்ந்த அளவில் தேவி வழிபாட்டின் பழமைக்கும் புதுமைக்கும் மகிமைக்கும் இணையற்ற அத்தாட்சியாக விளங்குவது நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயம். அதன் பழைய வரலாற்றையும் அங்கே அம்பாள் பவனி வரும் புதிய அலங்காரத் தேரின் அற்புத சிற்ப வேலைப் பாட்டையும், அதில் அமைந்துள்ள அழகிய சித்திரங்களின் தத்துவங் களையும் விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை இயற்றிய அன்பர் திரு.குல.சபாநாதன் அவர்கள் ஈழநாட்டின் புராதன புண்ணிய தலங்களின் வரலாறுகளையும் தமிழ்ப் பெரியார்களின், புலவர்களின் சரித்திரங்களையும் அவர்களால் இயற்றப்பட்டு மறைந்து கிடக்கும் நூல்களையும் தேடிச் சேர்த்து அவற்றைத் தமிழ் உலகு அறியச் செய்வதைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர் இப்பெரியார்.

நாகபூசணி அம்பாள் அருள்பாலிக்கும் திறன் மிகவும் அற்புதமானதாகும். இதனை அனுபவத்தில் கண்டவர்களே நன்கு உணர முடியும். தனது ஆலய சம்பந்தமான திருத்தொண்டு எதுவாயினும் சரி, அதற்கு எவரை, எக்காலத்தில், எவ்விதத்தில் அப்பெருமாட்டி ஆட்கொண்டு கருவியாக்கிச் செய்வாள் என முன்கூட்டிச் சொல்லவோ திட்டமிடவோ முடியாது. பக்தியும் சைவ சமய சாஸ்திர அறிவும், சரித்திர ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே அமைந்த திரு.குல.சபாநாதன் அவர்கள் சென்ற சில வருடங்களாகத் தொடர்ந்து இவ்வித பிரசாரத் தொண்டில் ஈடுபட்டு வருவது தேவியின் திருச்சித்தப்படியேயாம். மேலும் மேலும் அவளது அளப்பரும் கருணைக்கு அவர் உரித்தாகுமாறு பிரார்த்திக் கின்றோம்.

க. இராமச்சந்திரன்

ஜயந்திபுரம்

தலங்கம,

சுபகிருது வைகாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பார்புரந்த திருவடியும் அடியவர் களீடேறும் படிக்குப்பைம்பொற்
றார்பரந்த வடிவழகு மழகெழுமங் கலநாணுந் தயங்குஞ்சோதிக்
கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங் கருணைக்
கண்ணுஞ்
சீர்புரந்த பிடியன்ன மென்னடையம் பிகைபாதஞ் சிந்தை செய்வோம்

-தக்ஷிண கைலாசபுராணம்-

அன்னை பராசக்தி வழிபாடு அகிலமெலாம் பரவியிருப்பதை யாவரும் நன்கறிவர். சத்தியும் சிவமும் ஒன்றே. விளக்கும் ஒளியும்போல.

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித்
தெருள்சிவம் இல்லை, அந்தச் சிவமின்றி சக்தியில்லை"

எனச் சிவஞானசித்தியாரில் வரும் அடிகள் இவ்வுண்மையினை நன்கெடுத்துக் காட்டுகின்றன.

"அகிலாண்ட கோடியீன்ற அன்னையே; பின்னையுங் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே!"எனத் தாயுமான சுவாமிகள் போற்றிப் பரவிய அன்னை கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் தலங்களுள் வட இலங்கையிலுள்ள நயினாதீவு நாகேஸ்வரி ஆலயம் மிக மிகத் தொன்மை வாய்ந்தது.

பொங்கிடு நெடுந்திரைப் புணரி நாற்றிசையும் பொருந்த, நடு மேவியுலகிற், புகழ் பெருகு நயினை மா நகரிலிருந்து புதுமை தரு புனித தாயின் கருணை தவழும் திருக்கோலம், கல்நெஞ்சக் கசடனேனையே கனியுறச் செய்யுமெனின், அன்னையின் அரவணைப்பிலுள்ள அடியார் நெக்கு நெக்குருகுவது வியப்பன்று.

"இலங்கையின் புராதனச் சைவவாலயங்கள்" என்ற வரிசையில் எழுதி வெளியிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நெடுங்காலமாக இருந்து வருகிறது. இதன் பயனாகச் சில நூல்களை வெளியிட்டு வருகின்றேன். இப்பொழுது நயினை நாகேஸ்வரியின் வரலாறும் தோத்திரத் திரட்டும் ஒரு சிறு நூலாக வெளியிட அருள்பாலித்த அன்னையை வணங்குகிறேன்.

இப்புனித தலத்தின் புராதன வரலாற்றை என்னாலியன்ற வரை ஆராய்ந்து தொகுத்து இந்நூலின் முதற் பகுதியாகவும் யான், சேகரித்த அநேக தோத்திரப் பாடல்களுட் சிலவற்றை தெரிந்தெடுத்து இந்நூலின் இரண்டாம் பகுதியாகவும் வெளியிடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பெற்றோர் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் மீது அளவிறந்த பக்திகொண்டொழுகி வந்தமையால் யானும் இளமைக்காலம் தொடக்கம் இப்புனித தலத்தையும் தரிசித்து வணங்கி வருவது வழக்கம். யான் சிறுகுழந்தையாய் இருந்தபோது அம்பாள் சந்நிதானத்திலே அர்ப்பணித்து அவள் ஈந்த பிள்ளையாகவே என்னை வளர்த்து வந்தனர் என் பெற்றோர். மேலும் ஆண்டுதோறும் நயினைதீவு அம்பாள் பூசைக்காக மீசுபொலி நெல் சேகரிக்க வரும் தொண்டருக்கு என் அன்னை உணவும் உறையுளும் கொடுத்து பக்தியுடன் ஆதரித்து வரும் வழக்கம் உடையவராதலின், அம்பாள் மீதுள்ள பக்தி என் இளம் வயதிலேயே வேரூன்றக் காரணமாய் இருந்தவர் என் அன்னையே. அன்னைக்கு அன்னையாய் அண்டகோடி புகழ் நயினை வாழும் அகிலாண்ட நாயகியென் அம்மையைப் பற்றிய இச்சிறு நூலை அம்மையன்பர் வெளியிடத் துணிந்தேன். அருள்சுரக்கும் அன்னையை அடியார் நினைந்துருக இந்நூல் உதவுமாயின் இந்நூலின் பயன் நிறைவேறியதாகும்.

இந்நூலுக்கு அணிந்துரை அளித்த "ஆத்மஜோதி" ஆசிரியரும், நாகேஸ்வரியன்னையின் நற்தொண்டருமாகிய உயர்திரு.க.இராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

இந்நூலை அழகுற அச்சிடுவதில் மெய்கண்டான் அச்சக அதிபரும் எனது அருமை நண்பருமான திரு.நா.இரத்தனசபாபதி அவர்கள் முன் வந்து கைகொடுத்து உதவினார்கள். இந்நூல் அமைப்புக்கும் உரிய காலத்தில் வெளியிடுவதற்கும் மெய்கண்டான் அழுத்தக அலுவலகத்து திரு.நல்லதம்பி நமசிவாயம் அவர்கள் அதிக ஊக்கத்துடன் உழைத்தார்கள்.

இந்நூலினையும், தோத்திரப் பாடல்களையும் பிரதி செய்வதில் உதவி புரிந்த திருமதி. அ. வாலாம்பிகை அவர்களுக்கும் "புறூவ்" பார்ப்பதில் உதவி புரிந்து, படங்களைத் தெரிந்தெடுத்துதவிய எனது அலுவலக மொழி பெயர்ப்பாளர் திரு.அ.தெய்வேந்திரன், திரு.க.தில்லைநாதன் ஆகியோருக்கும் அன்னை அருள் பாலிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

அன்னை பராசக்திக்கு வணக்கம்.

குல. சபாநாதன்

"முருகன் அருள்"

3/2, இராமகிருஷ்ண ரெறெஸ்,

வெள்ளவத்தை.

04-06-1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரதோற்சவம் அன்று
தங்கத் திருவாசி அலங்காரத்தில் அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

# கோயில் வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு

எவர் எவர் எவ்வெச்சமயத்தைக் கைக்கொண்டபோதிலும், இறுதி இலட்சியம் ஒன்றே என்பதைக் காட்டுவற்கான தலங்கள், உலகாயதம் பரவிவரும் இக்காலத்திலும் உலகெங்கணும் இருக்கத்தான் செய்கின்றன. எங்கள் சிறிய இலங்கையிலும் கானக மத்தியில் விளங்கும் கதிர்காமம் வானுறவோங்கும் சிவனொளி பாதம், ஆழ்கடல் சூழ் நயினாதீவு என்பன எம்மதத் தவர்க்கும் சம்மதம் கொடுப்பனவாய் அமைந்துள்ளன.

நயினாதீவைப்பற்றிப் பல ஐதீகங்களுன. அத்தீவிலுள்ள நாகேஸ்வரி ஆலயத்தைப்பற்றியுள்ள ஐதீகங்களும் மிகப்பல. இ:.து எப்பொழுது தோன்றியது? எவ்வாறு விருத்தியாகிப் புகழ்பெற்றது? என்னும் இன்னோரன்ன வினாக்களுக்கு ஆராய்ச்சியாளர் திருப்தியடையக்கூடியதாக விடைகூறும் சரித்திர நூல்கள் இல்லை. எனவே கர்ண பரம்பரையாக வழங்கும் கதைகளைக்கொண்டும் பிற்காலத்தவர் ஆங்காங்கு எழுதிய குறிப்புக்களைக் கொண்டும் இத்தலத்தின் வரலாற்றை ஊகிக்கமுடியுமேயன்றி நிதார்த்தமாக அதுபற்றிக் குறிப்பிட்டுத் துணியவொண்ணாது.

நயினாதீவுக்கு நந்தாப் புகழையளிப்பது ஆண்டுள்ள நாகேஸ்வரி ஆலயமாகும். இது நாகம்மாள் கோயில், நாகபூஷணியம்பாள் கோயில் எனவும் வழங்கப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து காரைதீவுக்குச் சென்று அங்கிருந்து வத்தைகள், "போட்டுகள், மோட்டார் லாஞ்சிகள்" மூலமாக யாத்திரீகர்கள் நயினாதீவுக்குள் செல்வது வழக்கம். புகழ்பெற்ற இச்சிறு தீவின் சுற்றளவு ஏறக்குறைய நாலு மைல் வரையிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு நேராகச் செல்வதற்குச் சாலை வசதி ஏற்பட்டு விட்டது. எனவே யாத்திரீகர்கள் புங்குடுதீவு சென்று, யந்திரப்படகு மூலம் நயினாதீவுக்குப் போதல் சுலபமும், துரிதமும் ஆகும்.*( தற்போது குறிகட்டுவான் வரை சாலை வழியே வாகனத்தில் சென்று குறிகட்டுவானிலிருந்து படகுகள் மூலம் நயினாதீவுக்கு செல்லக்கூடியதாக உள்ளது)*

## நாகம் அர்ச்சனை செய்தது

முன்னொருகாலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம்அர்ச்சனை செய்வதற்காகப் பூக்கள் கொய்வதற்காகச் செல்லும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதி ரேயிருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிர ண்டும் பகைமைகொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற வைசியன் ஒருவன் அந்நாகத்தின் பயத்தை குறிப்பாலுணர்ந்து, மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான் . "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என்முன் வைத்தால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்கனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும் பொழுது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரொளி தோன்றி அவர்களுடைய கண்ணைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபொழுது நாகரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள். நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினாப்பட்டர் எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத்தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டுகின்றார்கள். இக்கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகியிருத்தலும் கூடும்.

## பழைய துறைமுகம்

நயினாதீவு பண்டைக்காலத்திற் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கிற்றென்பதற்கு ஐயமில்லை. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையால், தமிழ்நாட்டுக் கப்பல்களும் அந்நிய நாட்டுக் கப்பல்களும் இத்துறையிற்றங்கியே சென்றிருக்கக்கூடும். இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகின்றது. மேற்குப் பகுதிக் கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் நாகம்மாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமும் இக்கொள்கையினை வலியுறுத்துகின்றது. இச்சாசனம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலனறுவையிலிருந்து அரசாண்ட மகாபராக்கிரமவாகு என்பவனால் பொறிக்கப்பெற்றது. இக்கடலில் நாவாய்கள் காற்றில் அகப்பட்டு உடைந்துபோனால் எவ்வித முறை கையாளப்பட வேண்டுமென்பது இச்சாசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. எனவே கப்பல்களிற் போக்குவரத்துச் செய்தவர்களும் வணிகரும், நயினாதீவிலுள்ள ஆலயத்தை தரிசித்திருத்தல் கூடுமென ஊகிக்க இடமுண்டு.

## சீனத்துச் சாடிகள்

சில வருஷங்களுக்குமுன் பப்பரவன்சல்லி என்னும் காணியிற் கிணறு ஒன்று தோண்டியபோது சில சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றைக் கொழும்பு நூதனசாலைக் கனுப்பி வைத்தபொழுது அவை சீன தேயத்துச் சாடிகள் எனவும் 12ம் நூற்றாண்டில் செய்யப்பட்டவையாயிருத்தல் கூடுமெனவும் நூதனசாலை அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். பௌத்த மதம் இலங்கையிற் பரவியிருந்த காலத்தில் புங்குடுதீவு (புவங்குதிவயின) நயினாதீவு (நாகதிவயின) ஊறாத்துறை (தன்னிதிவயின) அனலைதீவு (அக்னிதிவயின) காரைதீவு (காறதிவயின) முதலிய தீவுகள் பிரபல்யமுற்று விளங்கின. பௌத்தர்கள் இத்தீவுகளில் விகாரைகளைக் கட்டினார்கள் நயினாதீவிலும் ஒரு விகாரை கட்டப்பெற்றது. ஆனால் அந்த விகாரை இப்பொழுது அழிவுற்றுக்கிடக்கின்றது. எனினும் புத்தர் கோயிற்குளம் புத்தர் கோயிலடி, புத்தர் திடல் எனும் இடப்பெயர்கள் பண்டைக்கோயிலின் பெருமையை நினைவூட்டும் சாதனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவும் இன்றும் மிளிர்கின்றன. புத்தர் திடலில் துளசிச் செடிகள் இப்பொழுதும் தாமே முளைத்து அழிதலையும் காணலாம்.

## மணிமேகலா சம்பந்தம்

மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்ததென்ற ஐதீகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதைபண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக்கொண்டிருந்தது. மணிமேகலை மணி பல்லவத்தைத் தரிசித்தாளென மணிமேகலையெனும் காப்பியம் கூறுகின்றது. மணிபல்லவம் என்பது காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனையளவிலுள்ள ஒரு சிறுதீவு என்பது மணிமேகலையெனும் நூலிற் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை மணிபல்லவத்தில் இறங்கி அமுதசுரபியெனும் அக்ஷயபாத்திரத்தைப் பெற்றாள் என மேற்கூறிய நூல் தெரிவிக்கின்றது. மகாவம்சத்தில் இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறப்பட்டுள்ளது. நாகதீபத்தைப்பற்றி புத்த ஜாதகக் கதைகளில் அநேக குறிப்புகள் காணப்படுகின்றன.

நாகதீவு அல்லது மணிபல்லவம் எதுவாயிருக்கலாம் என்பது பற்றி அபிப்பிராய பேதமுண்டு. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமே மணிபல்லவம் அல்லது நாகதீவு என்றழைக் கப்பட்டதெனக் காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதினார்கள். டாக்டர் போல்பீரிஸ் அவர்களும் இக்கொள்கையை ஆதரித்து எழுதியுள்ளார். வல்லிபுரக்கோயிற் பொற்சாஸனத் தைப்பற்றி டாக்டர் எஸ்.பரணவிதான அவர்கள் எழுதிய கட்டுரையி லும் இக்கொள்கையினை வலியுறுத்தியே எழுதியுள்ளார். இப்பொழுது நயினாதீவு எனப்படுவதே பண்டைக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபல்லவம், நாகதீவு, மணித்தீவு எனப்பல பெயர்களால் வழங்கப்பட்டதென்பர் பிறிதொருசாரார். இக்கொள்கையினை ஆதரித்து திரு செல்லையா தில்லையம்பலம் அவர்கள் "நற்றவம் மிக்க நயினாதீவு" எனும் கட்டுரையொன்று எழுதியுள்ளார். இங்ஙனம் ஆராய்ச்சியாளர் வாதமிடினும் பொதுஜனங்கள் இவற்றைப் புறக்கணித்து நயினாதீவையே புண்ணியஸ்தலமாகக் கொண்டு வழிபடுகின்றனர். பௌத்தர்களும் தங்கள் புத்தர் பெருமானின் பாதம்படிந்த புண்ணிய ஸ்தலமாகிய நாகதீவு இந்த நயினாதீவே யென்று கருதி அங்கே ஒரு விகாரை கட்டியுள்ளார்கள். இப்பொழுது ஏறக்குறைய நாடோறும் யாத்திரீகர்கள் அனேகர் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த விகாரை பல்லாயிரக் கணக்கானோர் பக்தியுடன் சென்று வணங்கும் ஆலயமாக விளங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கடலோட்டுகாதை, வெடியரசன் நாடகம், வையாபாடல் முதலியவற்றை நோக்குமிடத்து நயினாதீவு யாத்திரை ஸ்தலமாக விளங்கியிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு.

நாகநயினார் அல்லது நாகதம்பிரான் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்தலமாதலின் இது நாகநயினாதீவு எனப் பெயர் பெற்றதெனவுங் கொள்ளலாம்.

## கோயிலை இழத்தல்

புராதனப்பெருமைவாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப் பட்டு விளங்குவதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டுவைப்பார்களா? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் செயலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசைபிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினர். கோயில் தரைமட்டமாக்கப்பட்டது இந்த வன்கணாளரின் கொடிய செயலைக் கண்டு சைவமக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டு வந்த மூர்த்திகளையும் பூசைப்பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக் கூடாதெனக் கருதிய சைவ நன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங் களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரை யிலுள்ள ஓர் ஆலமரப்பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்த மரம் "அம்பாள் ஒளித்த ஆல்" என வழங்கப்பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அந்நியர்கோயிலை இடித்தபோதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவள் நயினாதீவு மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் உறுதியான இடம்பெற்று விளங்கினாள். அந்நிய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினாதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லையென்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயிலை அந்நியர் அழிக்க வந்தபொழுது கோயிற்தேர் தானாகவே உருண்டு மேற்குக் கடலில் ஆழ்ந்து விட்டதாம். ஒரு சமயம் அக்காலச் சைவமக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருத்தலும் கூடும். சிற்சில காலங்களில் தேர்முடி கடலில் பௌர்ணமித்தினத்தில் தெரிகிறது என்ற ஒரு கதையும் அடிக்கடி கேட்கப்படுவதுமுண்டு. இது பண்டைக் காலத்தில் தேர் முதலியன கடலினுள் தள்ளப்பட்ட நிகழ்ச்சியின் எதிரொலியாக இருக்கலாம். இவ்வாலயத்திற்குச் சமீபமாகவிருக்கும் தென்னந் தோப்புக்களிற் சில விடங்களிற் கிண்டிப் பார்த்த பொழுது, தரையின் கீழ் பழைய கட்டடங்கள் காணப்பட்டன. திருக்குள மொன்று வெட்டியபொழுது கோயிற் பூசைக்குரிய வெண்கலப் பொருள்கள் சில வெளிக்கிளம்பின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடிப்பூர திருவிழா அன்று தங்கத் திருவாசி அலங்காரத்தில் அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிற் புனரமைப்பு

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினாதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த இடத்திற் காணாமையாற் பெரிதும் கவலைகொண்டார்கள். ஆயினும் நயினாதீவுக்கு வடபால் உள்ள புலியேந்தி அல்லது புளியந்தீவு எனும் சிறுதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினார்கள். இக்கோயில் நாகதம்பிரான் கோயில் என அழைக்கப்படுகின்றது. புலியேந்தியிலுள்ள நாகதம்பிரான் கோயிலிலே தாபித்திருக்கும் சிவலிங்கம் நயினாதீவு நாகேஸ்வரி ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் முன்னரே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கங்களுள் ஒன்றாயிருத்தல் கூடும் என்ற கொள்கையும் உண்டு.

டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்னர் நாகேச்சரத்தில் தேவி ஆலயமே முதன்மை பெற்றுளதெனக் கருத இடமுண்டு. அற்றன்று பண்டுதொட்டு இது தேவி ஆலயமாகவே விளங்கிற்று என வாதிப்பாரு முளர்.

அழகிய கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நாகேஸ்வரி கோயிலின் வாயிலில் இரண்டு பீரங்கிகளும் ஒரு கற்சில்லும் இருப்பதை யாத்திரீகர்கள் அவதானித்திருக்கலாம். இப்பீரங்கிகள் டச்சுக்காரர் காலத்தனவாயிருக்கலாம். இவை இத்தீவின் அயலிலுள்ள கடலிலிருந்து கடற்றொழிலாளரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டன. அங்குள்ள கற்சில்லு பழைய தேர்ச்சில்லு எனவும், கப்பல் நங்கூரமெனவும் கூறப்படுகின்றது. இது பழைய கோயிலின் துவஜஸ்தம்பத்தின் பாகமாயிருக்கவும் கூடும்.

அண்மைக்காலம் வரை நாகபாம்புகள் இக்கோயிலுக் கருகில் வந்து செல்வது வழக்கமெனச் சில முதியோர் கூறக்கேட் டிருக்கிறேன். பாம்பு வணக்கம் இந்துக்களுட் பண்டு தொட்டுக் காணப்பட்ட மிகவும் புராதன வழிபாடாகவே தெரிகிறது.

## இப்போதுள்ள கோயிலமைப்பு

நயினாதீவின் கிழக்குத் திசையிற்றான் துறைமுகம் உண்டு. இத்துறைமுகத்திலிருந்து செல்லும் பாதை அம்பாளின் கீழைவீதி வரை சென்று பின்னர் தெற்கு நோக்கிச் செல்கின்றது. எனவே நயினாதீவுத் துறைமுகத்தில் வந்து இறங்குகின்ற சகலரும் அம்பாளின் விடைபெற்றே ஊருக்குள் உலாவ வேண்டும் என்ற முறையில் கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடையதாய்க் கட்டப்பட்டுள்ளது. யாத்திரீகர் நாவாயில் வரும்பொழுதே தூரத்தில் தூலலிங்கமாகிய கோபுரத்தை தெரிசித்து அம்பாளுடைய புனித தலத்திற் கால்வைக்கின்றனர். கோயிலும் அதனைச் சார்ந்த நிலமும் 150 லாச்சம் விஸ்தீரணமுள்ளது. கோயிலும் வீதியும் 15 பரப்பு வரை இருக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனு மும்மையானும் சிறந்து விளங்குவது இந்த நாகேஸ்வரி ஆலயமாகும். கோயிலுக்குத் தென்புறத்திலும் வடபுறத்திலும் தீர்த்தம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமலிங்கர் இராமச்சந்திரர்

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவசமயக் கோயில்களை பதிவு செய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு. இது 1882ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது. அதில் இந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் விவரம் பின்வருமாறு.

## நாகபூஷணி அம்மன் கோயில்

இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788 இல் கட்டியது. மனேச்சர். இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும் . கற்கட்டடம்.

திருவிழா: ஆண்டுக்கொருமுறை ஆனி 10ஆம் தேதி தொடக்கம் 20ஆம் தேதி வரை 10 நாட்கள் திருவிழா.

கோயில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக் கொண்டு வலம் வருதல் அல்லது தேரில் வலம் வருதல்.

திருவிழாக் காலங்களில் 10,000 பேர்வரை வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் அயலிலுள்ள தீவுகளிலுமிருந்து யாத்திரீகர் வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இராமச்சந்திரனின் ஆண் சந்ததியினரே இக்கோயில் மனேச்சராக இருந்து வருக்கிறனர் எனச் சொல்லப்படுகின்றது.

காலத்துக்குக் காலம் இக்கோயிலில் அநேக திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன. திருக்கோயிலின் கீர்த்திக்கியைய வானுற ஓங்கிநிற்கும் கோபுரமொன்று கிழக்கு வாயிலில் அமைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெற்றுள்ளது. இத்திருப்பணியில் வட்டுக்கோட்டையைச் சார்ந்த இரகுப்பிள்ளை மணியம் அவர்கள் அதிக அக்கறை எடுத்து வந்தார்கள். பின்னர் வேலணைச் சோமசுந்தரமணியம் அவர்களும் இத்திருப்பணியில் ஈடுபட்டுழைத்தனர். இந்தக் கோபுரம் 1935 ஆம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது. இந்தக் கோயில் ஏனைய சாதாரண கோயில்களைப் போலவே கர்ப்பக்கிருகம். அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. கோயிலின் தென்புற உள்வீதியில் பிள்ளையார் கோயில், வாகனசாலை, சுப்பிரமணியர் கோயில் என்பவை உண்டு. கிழக்கு வீதியில் நவக்கிரகங்கள், வைரவர் கோயில் முதலியன உண்டு. தேரோடும் வெளிவீதியில் வேப்பமரங்கள் காணப்படுகின்றன. யாத்திரீகர் தங்குவதற்கு வசதியான கிழக்கு மடம், மேற்கு மடம் தெற்குமடம், தென்மேற்கு (சோமபதி) மடம், வடமேற்கு (நகரத்தார்) மடம், வடக்கு (இளந்தளையசிங்க முதலியார், வட்டுக்கோட்டை) மடம், குணரத்தினமடம் ஆதியன உண்டு.

## விமானப் புனரமைப்பு

நாகபூஷணி அம்மாள் கோயிலின் விமானப்புனரமைப்பு வேலையை, ஸ்தபதிகள் பரம்பரையில் உதித்தவரும் சிற்பத்தொழிலில் புகழ் பெற்றவருமாகிய காரைக்குடி திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் 1951 ஆம் ஆண்டு தை மாதம் மேற்கொண்டார். பாண்டிய நாட்டுச் சிற்ப முறையில் இரண்டு நிலை விமானம் அமைக்கப்பட்டது. அம்பாள் கோயிலின் விமான வேலையை முடித்த பின்னர், பரிவாரமூர்த்திகளின் பண்டிகைகளும் திருத்தியமைக்கப்பட்டன. 26.04.51 இல் ஸ்ரீ நாகபூஷணாம்பிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
தென்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புநராவர்த்தன சம்புரோஷண மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது அப்பொழுது வெளிவந்த விஞ்ஞானப் பத்திரிகையில் இந்தத் தலத்தில் பெருமை இரத்தினச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு.

ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிஷத் துக்களிலே எடுத்தோதப்பெற்றதும். இவ்விலங்கா தீபத்தின் கண்ணே அநேகம் சிவஸ்தலங்களோடு கூடியதும் வடமேற்றிசையில் ஆழிய சாகரம் மத்தியில் தோன்றி சப்த துவீபங்களுட் சிறப்புற்று விளங்கும் நயினாதீவில் இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் சர்வலோக ரக்ஷகியாகிய உமையம்மையாருக்குப் பிரபல வாசஸ்தானங்களாயமையப் பெற்ற அறுபத்து நான்கு பீடங்களுள் ஒன்றாயதும் நாகர்களினால் பூஜிக்கப் பெற்றதும் அருச்சுனன் முதலிய அரசர்களால் தரிசிக்கப் பெற்றதும், சிவானுபூதிச் செல்வர்களாலும் பிறராலும் சிவபூமி, சுவர்ணபூமி புண்ணியபூமி, அனுக்கிரகஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும், இவ்விலங்காதேவியின் பராசக்திக்கு முக்கிய ஸ்தானமாகவுள்ளதும், சர்வான்மாக்களுக்கும் மனோபீஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவாரணியும், ஆன்மாக்களது தியானாதிகளுக்குத் தாம் அகப்படுதல் வேண்டுமென்னுந் திருவருளினாலே சக்திகாரியமாகிய உருவத் திருமேனிகொண்டு திவ்விய மந்திர சிம்மாசனத்தின் மீது ஸ்ரீ நாகராஜேஸ்வரி எழுந்த ருளியிருக்கும் திருக்ஷேத்திரத்திலே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகைக்கு ஸ்ரீ சக்கரபூஜை நடாத்திவந்த பிரமஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்களின் சீடராகிய நயினாதீவு பிரம்மஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் அவர்கள் ஸ்ரீ சக்கரபூசையை நாகேஸ்வரி ஆலயத்திலும் ஆரம்பித்து வைத்தார்கள். குருக்கள் அவர்கள் கோயிற் கிரியைகளைப் பயபக்தியுடனும் முறை பிறழாமலும் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் உள்ளத்தில் பக்தி தானாகவே அரும்பிவிடும். இவரிடம் கற்ற நயினாதீவு பிரமஸ்ரீ கயிலாயநாதக்குருக்கள் அவர்களும் கோயிற் கிரியைகளை முறையாகச் செய்வதிற் பிரசித்திபெற்று விளங்குகின்றார்கள். பிரமஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் அவர்களின் மகன் சிவஸ்ரீ நா. பரமேஸ்வரக்குருக்கள் அவர்களும் கோயிற் கிரியைகளைச் செவ்வனே செய்து வருகிறார்கள்.

*(தற்போது சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களின் மகன் சிவஸ்ரீ கை. வாமதேவக்குருக்களும், சிவஸ்ரீ சு. பாலசுந்தரக்குருக்களின் மகன் சிவஸ்ரீ பால. கணேஸ்வரக்குருக்களும், சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களின் மருமகன் சிவஸ்ரீ ச. சர்வேஸ்வரக்குருக்களும் நித்திய மாதாந்த உற்சவங்களை நிகழ்த்திவருகிறார்கள். மகோற்சவம், கும்பாபிஷேகம் என்பவற்றை சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்களின் மகன் சிவஸ்ரீ ப. முத்துகுமாரசாமிக்குருக்கள் நிகழ்த்தி வருகின் றார்.)*

கோயில் விக்கிரகங்களின் சிறப்பைப்பற்றி ஸ்ரீ செல்லக் கண்ணு ஸ்தபதியார் கூறிய கருத்து வருமாறு:-

"மூலஸ்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகிறது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம். மூலஸ்தான விக்கிரகத்துக்குப் பின்னால் உள்ள நாகபடம் பார்க்கப் பயங்கரமாக விருக்கிறது. சீறுவதுபோல் இருக்கிறது.

ஸ்ரீநாகபூஷணி உற்சவ விக்கிரகம் லக்ஷணமாகவும், சாந்நித்தியம் பொருந்தியதாகவும், தேஜோமயமாகவும் இருக்கிறது.

நவராத்திரி காலங்களில், ஸ்ரீசக்கரபூஜையின் மகத்துவத்தினாலும் மற்றும் சில அமானுஷிக காரணங்களாலும் இவ்விக்கிரகம் அசாதாரண சோபையுடன் காட்சியளிப்பதை எவரும் கண்டு களித்திருக்கலாம்.

உற்சவ விக்கிரகம் சுமார் 500 வருடத்திற்கு முந்தியதாகத் தெரிகிறது. இத்தகைய பிரகாசமுள்ள விக்கிரகங்களைக் காண்பதரிது.

கோயிலிலுள்ள ஸ்ரீசக்கரம் பூப்பிரஸ்நாதம் செப்புத்தகட்டில் சாஸ்திரிய முறையில் செய்யப்பட்டிருக்கிறது.

## தியானஞ் செய்வதற்கேற்ற ஆலயம்

"அந்தராத்ம யோகத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தியானஞ் செய்வதற்குத் தகுந்த சூழ்நிலையை நயினாதீவு அம்பாள் கோயிற் சுற்றாடலிற் காணலாம். நாலாபக்கமும் கடலினால் சூழப்பட்டு அழகிய சிறு தீவாக நயினாதீவு விளங்குகிறது. பௌர்ணிமைத் தினத்தன்று நடுநசியின் போது ராஜகோபுரத்தின் கீழமர்ந்து தியானஞ் செய்தால் பயங்கரமானதொரு தெய்வீகசக்தி தம்முள் இறங்குவதை உணரலாம். பயங்கரமாக அச்சக்தி இருப்பதற்கு நம்மிடமுள்ள குறைபாடுகளே காரணமாகும். சுயநலவழிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம்பாவத்துடன் செல்லும் நம் மனசானது சக்திவாய்ந்த தெய்வசாந்நித்யத்துடன் சம்மதப்படும் பொழுது ஒருவித அதிர்ச்சியை அடைகிறது. இந்த அதிர்ச்சியானது "நான்" என்ற அகம்பாவத்தை ஈடாகச் செய்வதற்கே ஏற்படுகிறது. "நான்" என்ற உணர்ச்சியைப் பரித்தியாகஞ் செய்ய நாம் இலேசில் இடங்கொடுப்பதில்லை. ஆனால் "நான்" என்ற உணர்ச்சி அற்றுப்போகாத விடத்துத் தெய்வ அருள் கிட்டாது" சித்தர்களும் யோகிகளும் இந்தச் சூழ்நிலையைப் பெரிதும் விரும்பிச் செல்கிறார்கள்.

## ஆலய பூசையும் விழாவும்

உஷத்காலம், காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்து கால நித்திய பூசை நடைபெறுகின்றது. கோயிலுக்கென நித்திய மேளம் உண்டு. சிவன் அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு ஆகிய ஐவரின் பூஜைத் தினங்கள் ஒவ்வொரு மாதத்திலும் நடைபெறும். ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெறும். திருவிழா பத்து நாள் நடைபெறும். புரட்டாதியில் நவராத்திரி பூசை சிறப்பாக நடைபெறும். பகலிற் சங்காபிஷேகமும் இரவில் ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெறுவதுடன் விஜயதசமியன்று அம்பாயுத பூசையும் வன்னிவிருட்ச பூசையும் நடைபெறும்.

இவ்வாலயத்திற் பாரம்பரியமாகச் சந்தான கோபாலப் பிரதிஷ்டை செய்த அளவிறந்த பக்தர்கள் புத்திர சந்தானமுடைய வர்களாய் மீண்டும் அம்பாள் தரிசனை செய்து விலை மதிப்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்கரிய திருவாபரணம், வாகனம், தீபம் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கின்றனர். இந்தக் கோயிலில் அழகிய கைலாச வாகனம் சர்ப்ப வாகனம், காமதேனு வாகனம் முதலியன உண்டு. இவை யாவும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுத்து உதவியனவாகும். *(1960ஆம் ஆண்டு முதல் 15 நாட்கள் கொண்ட மகோற்சவம் நடைபெற்று வருகின்றது)*

## ஆலய நிர்வாகம்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவக் கோயில்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் நோய் அம்பாள் ஆலயத்தையும் விட்டு விடவில்லை. ஆலய நிருவாகம் சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் இப்பொழுது நிர்வாகப் பொறுப்பு ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட தர்மகர்த்தாசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக ஆலய நிர்வாகஞ் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றது. *(198ஆம் ஆண்டிலிருந்து பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் சபை கோவிலை நிர்வகித்து வருகின்றது.)*

## அம்பிகையின் அருளொழுகு வடிவம்

நாகேஸ்வரியின் சாற்றற்கரிய சாந்நித்யத்தையும் தேஸோமயத்தையும் அருளொழுகு வதனத்தையும் நீங்கள் உண்மையிற் கண்டு கடைத்தேற விரும்பினால் இரதோற்சவத்துக்கு ஒருமுறை சென்று பாருங்கள். அந்தச் சக்தி வெள்ளத்தில் இறங்கி ஆடிப்பாருங்கள். அம்பிகையின் திருமுன் நின்று அனுதினமும் போற்றுந் தொண்டர்தம் பெருமை யார் சொல்ல வல்லார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரகவி நயினை நாகமணிப் புலவரே கூறுவாராயின் அம்பிகை தேரின் மீது இவர்ந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சியளிக்கும் அற்புதக் காட்சியை ஒரு முறையாவது காணப்பெறுவீர்களாயின் நீங்கள் எடுத்த பிறவியாற் பயனடைந்து விடடீர்கள் என்று சொல்லலாம்.

"எழுதரு மறையும் கடந்தநா யகிநன்
றிருந்தருள் செய்யுமத் தலத்திற்
பழுதறுஞ் சைவ தந்திர முறையாற்
பத்தியோ டவளடி பரசி
யழுதகண் ணொடுமெய் யரும்பநாத் தழும்ப
வகங்குழைந் தென்பெலா முருகத்
தொழுதகை யொடுநின் றனுதினம் போற்றுக
தொண்டர்தம் பெருமையார் சொல்வார்.

வாய்ந்தசெந் திருவுங் கலைகளுங் காண
மலங்குமன் பினையுளங் காண
வோய்தந்தவெம் பிணியாங் கடற்கரை காண
வுடற்றிடு மறலிபின் காண
வாயந்தமந் திரத்தின் பொருளது காண
வம்பிகை யோங்குசீ றடிகள்
காய்ந்தபுன் கண்க ளாமெனா தணிநேர்
காணுவார் கண்களே கண்கள்.

ஈர்த்தவே ளருங்கைச் சிலையலர் கூம்ப
வின்றிடுங் கருப்பைகள் கூம்பப்
போர்த்ததீ நிரையக் குழிகள்வாய் கூம்பப்
புறச்சம யாந்தகங் கூம்ப
மூர்த்தமா யிருந்த கவுரியா லயத்து
முன்புநின் றன்பொடு தலைமேற்
கூர்த்ததீ டுரக்கை இவையெனா துயர்த்திக்
கூப்புவார் கைகளே கைகள்

..................நயினைமான்மியம். மூர்த்திவிசேடச் சருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிமாதத்தில் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வடபகுதிக்கு யாத்திரீகர் திரள்திரளாகச் செல்வதைக் கண்டால் அவர்கள் நயினாதீவு நாகம்பாள் ஆலயத்திற்கே செல்கின்றனர் எனத் திடமாய்க் கூறிவிடலாம். பூசைகளும் நேர்த்திக்கடன்களுமாக நாளாந்தம் மக்கள் இக்கோயிலுக்குச் சென்று கொண்டிருக் கின்றனரெனினும் ஆனி மாதத்திற் பத்து நாட்களுக்கு அம்பாள் பவனி வந்து பக்தர்களை ஆசீர்வதிக்கும் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுங் காலத்தில் மக்கள் பெருந்தொகையாகச் செல்கின்றார்கள். அம்பாள்மீது கொண்ட ஆராத பக்தியினால் மக்கள் பிரயாணக்கஷ்டங்களையும் பொருட்படுத்தாது "மோட்டார் லாஞ்சி" களிலும் பாய்விரித்தோடும் தோணிகளிலும், வத்தைகளிலும் வள்ளங்களிலும் இங்கு வந்து குவிகின்றனர். இந்நாட்களில் துறைமுகத்தில் நூற்றுக்கணக்கான தோணிகளும் மோட்டார் படகுகளும் பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்களும் போய்வந்து கொண்டும், ஏறி இறங்கிக்கொண்டும் இருப்பதைப் பார்க்கப்பார்க்க, புராணங்களிற் கூறப்பட்ட சப்ததீவுகளில் ஒன்று இதுதானோ என்ற ஐயம் ஏற்படும். பூவுலகைக் கடந்து தெய்வலோகத்திற் சஞ்சரிப்பதைப் போன்ற பக்திபரவசம் ஏற்படும். இத்தீவுக்கு முதன் முதலாகச் செல்லும் ஒருவர் வடஇலங்கையிற் பெரிய துறைமுகம் நயினாதீவு தான் என்று முடிவுகட்டிவிடக் கூடும். இவ்வாறு அநேக நாவாய்கள் தங்கி நிற்பதை உற்று நோக்குமிடத்து நாகேஸ்வரி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலத்தின் பண்டைப் புகழை ஒருவாறு எங்கள் அகக்கண்முன் கொண்டு வருவதற்கு ஏற்படுத்திய ஜாலவித்தையென்றுஞ் சொல்லலாம். வர்த்தகக் கப்பல்கள் இடையிலே தங்கிச் செல்லும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகம் ஒன்று பண்டைக் காலத்தில் இங்கிருந்த தென்பது ஈண்டு நினைவு கூர்தற்பாற்று.

திருவிழா தொடங்கிவிட்டால் அதற்கு வரும் பக்தர்களை நயினாதீவு மக்கள் அன்புடன் வரவேற்றுத் தங்கள் வீடுகளிலுங் குடிசைகளிலுந் தங்குவதற்கு இடம் கொடுத்து ஆதரவளிக்கின்றனர். சனநெருக்கம் அதிகமாயிப்பதாற் பக்தர்கள் கோயில் வீதிகளில் பரந்த வேப்பமர நிழலிலும் தோட்ட வெளிகளிலும் கூடியிருந்து அம்பாளின் அருட்கோலத்தை தரிசிக்க ஆயத்தஞ் செய்வார்கள்.

பக்தர்கள் அதிகாலையில் துயில்விட்டெழுந்து காலைக் கடன் முடித்தபின், தாமரைக்குளம் போன்ற நன்னீர்க்குளங் களுக்குச் சென்று நீராடுவது கண்ணுக்கு இன்பமளிப்பதாகும். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள கிணறுகளைச் சுற்றியும் பக்தர்கள் கூடி நிற்பதைக் காணலாம்.

அதிகாலை ஆறு மணிக்கு முன்னரே அம்பாள் தரிசனத்துக்காக மக்கள் கோவிலையடைகின்றார்கள். எங்கே பார்த்தாலும் தொழுவாரும் அழுவாரும் புரளுவாருமாகக் காணப் படுவர். தம்மை மறந்து தம் மனைவி மக்களை மறந்து அகிலாண்ட ஈஸ்வரியின் அடிக்கமல பாதங்களைச் சிந்தித்து நின்று உரோமஞ் சிலிர்ப்ப உரைதடுமாற தாயே! தாயே! அரோகரா! நாகம்மாளுக்கு அரோகரா என்று கற்றாவின் மனம்போலக் கசிந்து கண்ணீர்மல்கிக் கதறும் மக்களின் ஒலி பாம்பன் கடலொலியையும் மலையடிவார அலையொலியையும், கடையொலியையும் மீறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயற்காற்றடித்து ஏழாற்றுப் பிரிவு குமுறிக்கொண்டிருக்குங் காலத்திற் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் யாத்திரை செய்வதில் ஈடுபட்ட போதிலும் அம்பாள் கடைக்கண் பார்வை செய்தருளு வதால் அந்த யாத்திரீகர்கட்கு எவ்வித தொல்லையும் ஏற்படுவதில்லை. நயினாதீவிலுள்ள தொண்டர் சபைகளும் முன்னேற்றச் சங்கங்களும் பொலிசாரும் ஒருங்கே சேர்ந்து எடுக்கும் நடவடிக்கைகள் மக்கள் கூட்டத்தில் நடைபெறக் கூடிய சாதாரண குழப்பங்களைக் குறைக்கின்றன.

## அம்பாள் அலங்காரத்தேரில் வீற்றிருக்கும் அற்புதக் காட்சி

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுள்ள உலகநாய கியாகிய நாகேஸ்வரி கருணைத் திருக்கோலத்துடன் வானளாவிய அலங்காரத்தேரின் மீது வீற்றிருந்து பக்கதர்களுக்கருள் புரியுங் காட்சியைக் காணில் கருங்கல் மனமும் கசிந்துருகும். திருவிழாவில் பத்தாம் நாளாகிய தேர்த் திருவிழாவன்று அம்பிகையின் அருள் வடிவக் காட்சி ஓர் அற்புதக் காட்சி. ஆனந்தக் காட்சி சொற்பிரபஞ் சத்துக்குள் அடங்காத காட்சி. நினைந்து நினைந்து நெக்கு நெக்குருக வேண்டிய காட்சி. சொல்லொணாக் காட்சியை தாமாக வேயுணர்ந்து இன்புற்றிருக்க வேண்டிய காட்சியை நாயேன் சொல்லத்துணிந்த பெருங்குற்றத்தை அம்பாள் பொறுத்து இரட்சிக்குமாறு கும்பிடுகின்றேன்.

அம்பாளின் அற்புத வடிவத்தைச் சொல்லோவியத்தில் தீட்ட முயன்றனர் புலவர் பலர். அவள் பக்திவலையிற் படுபவள் ஆதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி நிரம்பிய அடியாருக்கு எளியள் அல்லவா? ஆகவே அவளை ஒருவாறு வர்ணிக்க முயன்ற வரகவி முத்துக்குமாருப் புலவர்.

"பேர்தங்கு மகிலாண்டடுக்குமதி லுறுபொருட்
பிரிவுஞ் சரசாரமெனும்
பேருயிர்க்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாடவெளிதோ"

என்று கைவிட்டுவிட்டார், எனினும் அவர் வரையமுயன்ற சொல்லோவியம் இது:-

சோடுற்ற நவரத்தின கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகிலளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியு மலர்க்கையாற்
றொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தளக மரகதக் கொம்புமார்
துணைவிழியி லெழுதுமையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளினமுகமுந்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருமெய்யு மறிவினாலே
தெரிசிக்க வருள்வந்து நீடாயு ளும் பெருஞ்
செல்வமுந் தரவேண்டு(ம்) நீ
நாடுற்ற பலவளமு முறையுமிரு நயினா
நகர்க்கண்மரு வுங்கௌரியே
நாகமணி யும் பரமர் பாகமுறு மேகசிவ
நாகபூஈஸ் வரி அம்மையே

நயினாதீவு தேர்த்திருவிழாவின் போது அம்பிகையை வணங்குவது பெறற்கரிய பெரும் பேறாகவே சைவ நன்மக்கள் கருதி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வலோக நாயகியாகிய நாகேஸ்வரி அம்பாள் அலங்காரத் தேர்மீதிவர்ந்து வீதிவலம்வந்து இருப்புத் தானத்துக்கு வரும் வரை பக்த கோடிகள் நற்றவமிக்க நயினையம்பதியை விட்டகலமாட் டார்கள். அதுவரை யாத்தீரிகர்கள் விரும்பினாலும்கூட நயினாதீவை விட்டுப்புறப்பட முடியாது. வத்தைக்காரர் புறப்படவே மறுத்து விடுவர். வீதிவலம் வரும் அம்பாள் மீண்டும் இருப்பிடத்துக்கு வந்ததும் மக்கள் அர்ச்சனை முதலியவற்றைச் செய்வித்துத் தம் இறுதி வழிபாட்டையும் ஆற்றி அன்னையிடம் விடைபெற்றுக் கொண்டு பாலத்தை நோக்கிச் செல்வார்கள். அங்கே படகுகளிலும் லாஞ்சிகளிலும், போட்டுகளிலும், வள்ளங்களிலும் மக்கள் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு ஏறுவதையும் "அரோகரா அரோகரா" என்று சொல்லும் நாவும் அவ்வாறு அடிக்கடி சொல்லிச் சொல்லிப் பயின்ற வாசனை காரணமாக பண்பட்ட உள்ளமும் படைத்த மக்கள் அரோகராச் சொல்லிப் பாயிழுத்து நாவாய்களில் செல்வதால் சனத்தொகை சிறிது சிறிதாகக் குறைவடைவதையும் கடைசிவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால், சுவர்க்கலோகத்துக்குப் போய் மீண்டும் வந்திருப்பதாகவே தோன்றும். நம்வாழ்வென்பது ஓர் சந்தையிற் கூட்டம் என்பதும் மனத்திற் பதியாமற் போகாது.

## பக்தர் பலரின் கைங்கரியம் புதிய தேர்

நாகேஸ்வரி ஆலயத்தில் சிறந்த கோபுரமும் இருநிலை விமானமும் கட்டப்பெற்றுள்ளன. ஆனால் அம்பாள் நெடுங்கால மாகப் பழையதொரு தேரிலேயே திருவிழாவின் போது பக்தர்களுக்கு காட்சியளித்து வந்தாள். அந்த தேர் இழுபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதே ஈடாடத் தொடங்கியதைக் கண்டு பக்தர் பலர் கவன்றனர். இந்தக் கவலை தேர்த்திருவிழாவுக்குச் சென்றிருந்த பலரிடம் தோன்றியது. திருவருள் கூட்டி வைக்க பக்தர் பலர் ஒன்று கூடி அம்பாளுக்குப் புதியதொரு தேர் அமைத்து இழுக்கும்வரை உறங்கமாட்டோம் எனக் கங்கணம் கட்டினர். வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராகக் கொண்டு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த்திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப் படலாயிற்று. இச்சபைக்கு ஊர்காவற்றுறைக் காரியாதிகாரி திரு. செ சிவஞானம், திரு. ஆ. கந்தையா ஆகியோர் தனாதிகாரி களாகவும், திரு. வே. சுந்தரம்பிள்ளை, திரு. வே. செல்வநாயகம், திரு. கா. ஆறுமுகம் ஆகியோர் செயலாளர்களாகவும் கடமையாற் றினர். இத்திருப்பணியில் ஆரம்பத்திலிருந்து அருந்தொண்டாற்றிய விவேகானந்த அச்சக அதிபர் திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்கள் 27.2.1957 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனையின் பேரில் நாகர் கோயில் திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரியார் அவர்கள் நயினாதீவு நாகேஸ்வரியின் திருத்தேர்ப் பணியைக் கையேற்றார்கள். திரு. குமாரசுவாமி ஆசாரியார் தேர்ச்சி பெற்ற நுண்டொழில் வல்லுநர் சிலரையும் தம்முடன் கூட்டி வந்து தேர்த்திருப்பணிச் சபைக்காரியதரிசியாகவிருந்த திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்களு டைய வளவில் தேர்த்திருப்பணியை ஆரம்பித்தார்கள். முதன் முதலில் அவர்கள் மூஷிகவாகன விக்கினேஸ்வரருடைய திருவுருவத்தைப் படைப்புச் சிற்பமாகச் செதுக்கினார்கள். பின்னர் அவ்வாண்டில் நாகபூஷணி அம்பாளைப் புதியதேரில் உலாவரச் செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் அல்லும் பகலும் உழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள். அவர்களுடைய பணி அம்பாள் அருளினால் முட்டின்றி நிறைவேறிவிட்டது. இரதோற்சவம் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

## பல்வகைத் தேர்

தேர்கள் பலவகைப்பட்டனவாயினும் அவற்றின் உருவ அமைப்பில் அதிக உருவ வேற்றுமை காணப்படவில்லை. "தேர்கள் மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப்பெறும். உருளை நான்கு முதல் பத்து உருளைவரை இருப்பது உண்டு. திருவாரூர்த் தேர் மிகப் புகழ்பெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர் ஓட்டுதல் ஒரு சிறந்த கலை. எல்லாராலும் முடியாது. புறப்பட்ட பிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக்கணக்கான மக்கள் அதனை இழுக்க வேண்டும். தெப்பத்தேர், நீர்மேல் மிதக்குந் தேர், இது இக்காலத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வெகு சிறப்பாகச் செய்யப்படுகிறது. வெள்ளித்தேர்கள் திருவண்ணாமலை, பழனி முதலிய இடங்களில் உண்டு. வாகனம், தேர் இவைகளைச் செய்யும் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்." என்று கூறுகின்றார்கள் இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரச் செட்டியார் அவர்கள்.

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டுவடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க இடமுண்டு. மேலும் கொடுஞ்சி என்ற ஓர் உறுப்பும் தேர்களிலே அமைக்கப்பெற்றிருந்தமை நோக்கற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத்தேரின் வெள்ளோட்டமும் மலர் வெளியீடும்

நவமாயமைக்கப்பெற்ற சித்திரத்தேரின் வெள்ளோட்ட வைபவம் 8.7.57ல் நயினாதீவில் நடைபெறும் எனத் தேர்த் திருப்பணிச்சபை அறிவித்தது. அங்கே யாத்திரை செய்வதற்கேற்ற போக்குவரவு வசதிகளையும் உணவு வசதிகளையும் திருப்பணிச் சபை செய்து வைத்தது. பெருந்தொகைப் பணச் செலவிற் புதியதொரு சித்திரத்தேர்த் திருப்பணியை நிறைவேற்றிய தேர்த் திருப்பணிச் சபையினர் தேரின் வெள்ளோட்ட வைபவத்தின் போது சிறந்த மலர் ஒன்றினை வெளியிடக் கருதி அதனை எழுதித் தருமாறு என்னைக் கேட்டுக் கொண்டனர். இருவாரங்கட்கிடையே எழுதித் தரவேண்டுமென்றனர். இதனைக் குறித்த தினத்தில் வெளியிடுவதில் திரு வே. கிருஷ்ணபிள்ளையும், திரு. வே. கந்தசாமியும், திரு. வே. செல்வநாயகமும் பெருமுயற்சி செய்த னர். ஒருமாத காலத்துள் இதன் இரண்டாம் பதிப்பு வெளி வரலாயிற்று. திருவாரூர்த் தேரழகும் திருவிடைமருதூர் வீதியழகும் என்ற முதுமொழியொன்றுண்டு. ஆனால் சென்ற 1957ம் ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் திருநயினைத் தேரழகும் திருவிடைமருதூர் வீதியழகும் என்ற மொழியே பலர் வாயிலும் வழங்குகின்றது. ஈழநாட்டிலே இத்தகைய சிறப்புவாய்ந்த சித்திரத்தேர் இதுவரை அமைக்கப்படவில்லையென்றுதான் கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழநாட்டில்

"நம்முடைய ஈழநாட்டிலும் பழைய தேர்கள் காணப் படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத்தேர்கள் பல காணப்படுகின்றன. மாவிட்டபுரம், பறாளாய், சுதுமலை முதலிய இடங்களிலுள்ள தேர்களின் சித்திரங்கள் ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாய் விளங்குகின்றன. மாதகல் நுணசை முருக மூர்த்தி கோயிலில் உள்ள தேரும், பறாளையிலுள்ள தேரும் ஒரே காலத்தன என்றும் அவை சண்முகசேகர முதலியார் என்ற பிரதானி ஒருவராற் செய்யப்பட்டன என்றும் என் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மருதடி விநாயகர்கோயில் முதலிய ஆலயங்களிலுஞ் சித்திர வேலைப்பாடமைந்த தேர்கள் உண்டு.

இத்தகைய கீர்த்திவாய்ந்த தேர் வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேர் முக்கிய இடம் வகிக்கும் என்பதற்கையமில்லை. இந்த அழகிய தேரைப் பார்க்கவே பலர் நயினாதீவுக்கு யாத்திரை செய்வர் என்று அவுஸ்திரேலிய மரவேலை நிபுணர் திரு. ஹேப்ட் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர்வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது கண்டு மகிழ்ந்த இவ்வறிஞர் இத்தொழிலாளரை மனமாரப் புகழ்ந்துள்ளார்.

## தேரின் உறுப்புக்கள்

தேரின் உறுப்புக்களாகிய பூதப்பார், கன்னிலப்பார் முதலாவது நிலம், கபோதப்பார், ஆனைத்தொட்டிப்பார், அச்சப்பார், அச்சப்பூத்தலைப்பார், பூத்தலைப்பார், இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், சிம்மப்பூத்தலைப்பார், மூன்றாவது நிலம், நாகத்தலைப்பார், விஸ்தாரப்பார், தேவாசனம், சிம்மாசனம், கம்பங்கள், பண்டிகை, கர்ணக்குடம், மணிமுடி முதலியன சிற்ப சாத்திர முறைப்படி செவ்வனே அமைக்கப் பெற்றுள்ளன. நயினாதீவுக் கோயில்களைப் பற்றிய ஐதீகங்கள், சரித்திரத்தொடர்புள்ள சம்பவங்கள், கிருஷ்ண லீலைகள், அட்டமங்களம், அட்டதிக்குப் பாலகசக்திகள், அட்டலக்குமிகள், அம்பாளின் உருவ பேதங்களாகிய உருத்திர சக்திகள் பதினொன்றும் அவர்களுக்குரிய வாகனம், ஆயுதம் முதலியவற்றுடன் சிற்ப முறைக்கமையத் திறம்படப் பொறிக்கப்பெற்றுள்ளன. நாகம் ஒன்று புளியந்தீவில் இருந்து பூப்பறித்து கொண்டு வரும் வழியில் கருடனால் தாக்கப்பட்ட வரலாறு மிக அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

## சக்திக்குரிய தேர் வழிகாட்டி

அல்லியரசாணி ஆட்சி செய்த பொழுது அவளுக்கு மந்திரி பிரதானி, பணியாளர் எல்லாரும் பெண்களாகவே இருந்தார்களாம். ஆண்கள் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவும் முடியாதாம். அதுபோலவே உலக மாதாவாகிய நாகேஸ்வரி எழுந்தருளி வீதிவலம் வருவதற்குரிய சித்திரத்தேரிலும் சக்திகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே சுவாமி எழுந்தருளும் தேருக்கும் தேவி எழுந்தருளும் தேருக்குமுள்ள பிரதான வேற்றுமை இதுவேயாகும் என்பதை மனத்திற் பதித்துக் கொள்ளல் வேண்டும்.

இந்தத் தேரில் நான்கு அழகிய குதிரைகள் இருக்கின்றன அல்லவா? நான்கு வேதங்களாகிய குதிரைகளை ஒட்டுவன் த்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணி ( பிரமாவின் மனைவி) எனும் சக்தியாவாள் இந்த குதிரைகள் இருக்கிற பக்கம் கிழக்கு முகமாக அல்லது தேரின் கிழக்குப்பக்கமாகக் கருதப்படும். எனவே குதிரைகள் உள்ள பக்கத்தைக் கிழக்குப் பக்கமாகக் கருதினால் முதலில் அந்தப் பக்கத்தைத்தானே பார்க்க வேண்டும். நீங்கள் தேரிலுள்ள சித்திரங்களையெல்லாம் விக்கினமின்றிப் பார்த்து முடிக்க விநாயகர் துணையை நாடத்தானே வேண்டும். எனவே ஆகக் கீழேயுள்ள வரிசையில் கிழக்குப் பக்கத்தில் மூஷிகவாகன விக்கினேஸ்வரர் எங்கேயிருக்கிறார் என்று தேடிக் கண்டுபிடியுங்கள். அவருக்கு முன்னாற் கும்பிட்டுக் கொண்டு அலங்காரச் சித்திரங்களைப் பார்க்கத் தொடங்குங்கள்.

## சித்திரங்கள் பார்ப்போம் வாரீர்

**முதலாவது அழுத்தள வரிசை**

**கிழக்கு:-**

(1) மூஷிகவாகன விக்கினேஸ்வரர் (2) கம்பாநதி (3)பாலசுப்பிரமணியர் (4) நாககன்னிகை இருவருடன் நாகபூஷணி அம்மன் (5) துவாரசக்தி (6) கனிஷ்டா (7) வல்லிசுந்தரி

**இவை தவிர விக்கினேஸ்வரருக்கு முன்**

(அ) வேறு ஆயுதந்தாங்கிய நாகபூஷணி அம்மன் (ஆ) துவாரசக்தி (இ) இராஜராஜேஸ்வரி (ஈ) வல்லிசுந்தரி ஆகிய இவர்களின் சித்திர வடிவங்களுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு:-

(8) தக்ஷிணாமூர்த்தி (9) சரஸ்வதி (10) சிவதுர்க்கை (11) சங்கு பூதம் (12) தாரை ஊதும் பூதம் (13) சங்கு பூதம் (14) பஸ்மாசுர மோகினி (15) பூத சம்மாரம் (16) கோபிகா கிருஷணலீலை

மேற்கு:-

(17) வல்லி சுந்தரி (18) சுப்பிரமணியர் (வள்ளி தெய்வானை சகிதம்) (19) துவாரசக்தி (20) காளி (21) பிராம்மிணி (22) புவனேஸ்வரி (23) மஹேஸ்வரி (24) சேஹாஷனி (25) துவாரசக்தி (26) நர்த்தன விநாயகர் (27) வல்லி சுந்தரி

வடக்கு:-

(28) துவாரசக்தி (29) மோஹினி (30) சாமுண்டி (31) கத்தி கேடயம் உடைய பூதம் (32) இரட்டைத்தாரை ஊதும் பூதம் (33) கத்தி கேடயம் உடைய பூதம் (34) மனோன்மணி (35) சரஸ்வதி (36) துவாரசக்தி

இதைத் தவிர ஒவ்வொரு மூலைக்கும் 5 உருவங்கள் சேர்ந்த குதிரை நான்கும் இடையிடையே சிம்மக் கட்டைகளும் அமைந்திருக்கின்றன.

## இரண்டாவது வரிசை

கிழக்கு:-

(1) தேவி திருஞானசம்பந்தருக்குப் பால் ஊட்டுதல் (2) கஜகௌரி (3) கைலாச வாகினி (4) சிவபாதவிருதயர் சம்பந்தரைப் பார்த்து "உனக்குப் பால் கொடுத்தது யார் என்று கேட்கும் காட்சி (5) இலக்குமி அனுக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்கிழக்கு:**

(6) சோணங்கி முனிவர் (7) அன்னபூரணி (8) கோணங்கி முனிவர்

**தெற்கு:**

(9) நயினாப்பட்டருக்கு அம்பாள் ஐந்தலை நாகமாகக் காட்சியளித்தல் (10) புளியந்தீவில் நாகம் பூக்கொய்தல் (11) நாகம் வாயில் பூ எடுத்துக் கொண்டு கடல் கடத்தல் (12) கடலில் கருடன் பாம்பைக் கொத்த எத்தனித்தல் (13) வணிகன் கருடனை வேண்டிக் கொள்ளல்

இந்தக் கதையின் எஞ்சிய பகுதியை வடக்கு வரிசையில் உள்ள சித்திரங்கள் (25 - 29) மூலம் பார்க்கலாம்.

**தென்மேற்கு:**

(14) தும்புரு (15) நயினாப்பட்டர் மறைந்து நின்று நாகம் செய்வதைப் பார்க்கின்றார் (16) நாரதர்

**மேற்கு:**

(17) தேவி அனுமனுக்கு அனுக்கிரகித்தல் (18) குண்டோதரன் அன்னம் விழுங்கும் காட்சி (19) மீனாட்சி திருமணம் (20) மது, கைடப சம்மார அனுக்கிரகம் (21) சரவணப்பொய்கையில் தேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்கும் காட்சி

**வடமேற்கு:-**

(22) அகஸ்தியர் (23) அம்பாளை ஆலமரப்பொந்தில் ஒளித்து வைத்தல் (24) வசிட்டர்

**வடக்கு:**

(25) திரவியத்தை ஆலயத்திற் சேர்க்குமாறு கருடன் வணிகனுக்குக் கட்டளையிடுதல் (தெற்கு வரிசையிலுள்ள கதையின் தொடர்ச்சி) (26)வணிகன் திரவியத்தை ஆலயத்திற்குச் செலுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(27) போர்த்துக்கீசர் பவளத்தேரைக் கண்ணுறல் (28) போர்த்துக்கீசர் ஆலயத்தைத் தாக்குதல் (29) செப்புத்தேர், பவளத்தேர்களைக் கடலிலே தள்ளுதல்

வடகிழக்கு:

(30) வீரமுஷ்டி (31) அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் அளித்தல் (32) கௌதமர்

இவற்றைத் தவிர எட்டு மூலைகளிலும் எட்டு யாளிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

## மூன்றாவது வரிசை

கிழக்கு:-

(1) விஸ்வேஸ்வரர் (2) இந்திராணி (3) அட்டலக்குமியில் வீரலக்குமி (4) அட்டமங்கலத்தில் தர்ப்பணம் - கண்ணாடி 1 (5) பதஞ்சலி முனிவர் வழிபடும் காட்சி (6) அட்ட மங்கலத்தில், பூரணகும்பம் நிறைகுடம் 2 (7) அட்டலக்குமியில் தனலக்குமி (8) அக்கினி தேவி (9) நவசத்தி உற்பவம்

தென்கிழக்கு:

(10) நாகம், கன்னிகை (அலங்காரச் சித்திரம் ) (11) ஆபுத்திரன் பசுவினிடத்துக் கருணை கொள்ளுதல் இந்தக் கதை மணிமேகலையில் உள்ளது (12) ஆபுத்திரன் தவஞ்செய்தல் (13) ஆபுத்திரன் அட்சயபாத்திரத்துடன் நாகதீபத்துக்கு வருதல் (14) ஆபுத்திரன் அட்சயபாத்திரத்தை கோமுகிப் பொய்கையில் இடுதல் (15) அட்டநாகபந்தம் (16) நாகம், கன்னிகை (அலங்காரச் சித்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு:-

(17) நவநாரி குஞ்சரம்: ஒன்பது பெண்கள் ஒன்று சேர்ந்து நிற்குமிடத்து அவர்கள் எல்லாருடைய நிலையையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால், ஒரு யானை தெரிகிறதல்லவா? (18) யமதேவி (19) தனலக்குமி (20) அட்டமங்கலத்தில் ரிஷபம் - எருது 3 (21) அனுமனுக்கு மைநாகமலை உதவிபுரிதல் (22) அட்டமங்கலத்தில் யுக்மசாமரம் இணைக்கவரி 4 (23) அட்டலக்குமியில் தானியலக்குமி (24) நைருதிதேவி (25) அருச்சுனன் நாககன்னிகையைத் திருமணம் புரிதல்.

தென்மேற்கு:

(26) அலங்காரச் சித்திரம் (27) அட்டநாகபந்தம் (28) காளி தாண்டவத்தில் மாகாவிஷ்ணு புல்லாங்குழல் வாசித்தல் (29) காளி தாண்டவம் (30) பிரமன் தாளம் போடுதல் (31) நந்தி மிருதங்கம் வாசித்தல் (32) அலங்காரச்சித்திரம்

மேற்கு:

(33) திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் அருள்பெற்ற வரலாற்றுச் சித்திரம் (34) வருணதேவி (35) அட்டலக்குமிகளில் ஐஸ்வரியலக்குமி (36) அட்டமங்கலத்தில் ஸ்வஸ்திகம் 5 (37) ஐந்தலைநாகம் நாகரத்தினமளித்தல் (38) அட்டமங்கலத்தில் ஸ்திரீவற்சம் - தாயும் சேயும் 6 (39) அட்டலக்குமிகளில் ஆதிலக்குமி (40) வாயுதேவி (41) நயினாப்பட்டர் அம்பாளைப் பூசித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்கு:-

(42) அலங்காரச்சித்திரம் (43) சோழ மன்னன் பீலிவளையைக் காந்தருவ விவாகஞ் செய்தல் (44) பீலிவளை தன்மகன் ஆதொண்டனைச் சோழதேசம் அனுப்புதல் (45) புயலில் அகப்பட்டுக் கப்பல் கவிழ்தல் (46) ஆதொண்டனைச் சோழ மன்னனிடம் ஒப்படைத்தல் (47) ஆதொண்டனுக்கு மணிமுடி சூட்டுதல் (48) அலங்காரச் சித்திரம் - (நாகமும் கன்னிகையும்)

வடக்கு:

(49) ஹம்சநாரி (50) குபேரதேவி (51) அட்டலக்குமிகளில் கஜலக்குமி (52) அட்டமங்கலத்தில் தீபம் 7 (53) மீகாமன் நவரத்தினம் பெறுதல் (54) அட்டமங்கலத்தில் சங்கம் 8 (55) அட்டலக்குமியில் சந்தானலக்குமி (56) ஈசான்யதேவி (57) மகிஷாசுரமர்த்தநி

வடகிழக்கு:

(58) அலங்காரச் சித்திரம் - நாகமும் கன்னிகையும் (59) மீகாமனும் வெடியரசனும் சண்டையிடுதல் (60) மீகாமன் அம்பாளைப் பூசித்தல் (61) அப்பர் சுவாமிகள் (62) சுந்தரமூர்த்தி சுவாமிகள் (63) மாணிக்கவாசகசுவாமிகள் (64) அலங்காரச்சித்திரம்

இந்தச் சித்திரக் கட்டைகளுக்கு மேலே தளம் உண்டு. தளத்தில் இடப்பட்ட ஆசனத்திற்றான் அம்பாள் வீற்றிருந்து பக்தகோடிகளுக்குக் காட்சிகொடுத்துத் திருவருள் பாலிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டமங்கள தரிசனம்

தெய்வ சந்நிதானத்தையாதல் வேறு எவ்விடத்தையாதல் தரிசிக்கச் செல்வோர் முதலில் அட்டமங்களத்தை தரிசனை செய்து கொண்ட பின்னரே தாம் வந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வது சைவமரபு. எனவே இந்த இரதசந்நிதானத்தை அடையும் போதும் மங்களங்களைத் தரிசிக்க வேண்டும். எப்போழுதும் மங்களமாகவே வாழ வேண்டும் என்ற கோட்பாட்டுக்கியைய கண்ணாடி, நிறைகுடம், எருது, இணைக்கவரி, ஸ்வஸ்திகம், தாயும் சேயும், தீபம், சங்கு எனப்படும் அட்டமங்களங்கள் பொறிக்கப்பெற்றிருப் பதைக்காணலாம். படைப்புச் சிற்பங்களில் நவநாரிகுஞ்சரம் மிக அழகாகப் பொறிக்கப்பெற்றுள்ளது. மானிடப்பிறவியின் ஒன்பது தந்துவங்களையும் அடக்கியாள ஒரு பாகன் வேண்டும் என்பதைச் சிற்பி, பெண்கள் ஒன்பதின்மரின் உருவத்தை கொண்டு ஒரு யானை உருவம் சமைத்து அதன்மேல் ஒரு பாகனையும் பொறித்திருப்பது மிக அழகாகவிருக்கின்றது. இதில் சிற்பியின் கைத்திறன் நன்கு பிரதிபலிக்கின்றது. இவ்வாறு அம்சநாரியும் அமைந்திருக்கின்றது. பெண்கள் பலர் சேர்ந்து நடத்தும் லீலா விநோதங்கள் முழுத் தோற்றத்தில் ஓர் அன்னப்பட்சி உருவம்போலக் காட்சியளிக்கும் முறையில் சிற்பி சித்திரித்திருக்கின்றார். ஆறதனில் மணல் குவித்து அரிய பூசை செய்யும் காஞ்சி காமாட்சியைக் கங்காநதி கோலத்திலும் காசி விசாலாட்சியை அன்னபூரணி திருக்கோலத் திலும் மதுரை மீனாட்சியைத் திருக்கல்யாணத் திருக்கோலத்திலும் அமர்த்தியிருக்கின்றார். விஷ்ணு புல்லாங்குழல் ஊத, பிரமன் தாளம் போட, நந்தி மிருதங்கம் வாசிக்க, நாரதர் தும்புரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்புராக்களுடன் ஆடிப்பாடிக் களிக்க, காளிதேவி தாண்டவமாடும் காட்சி களிபேருவகையளிப்ப தொன்றாகும்.

*துங்கமிகு பக்குவச் சனகன் முதல்*
*முனிவோர்கள் தொழுதருகில் வீற்றிருப்பச்*
*சொல்லரிய நெறியை*
*ஒரு சொல்லாலுணர்த்தியே சொரூபாநு*
*பூதிகாட்டிச் செங்கமலபீடமேற்*
*கல்லாலடிக்குள் வளர்*
*சித்தாந்த முத்தி முதலே*

எனத் தாயுமான அடிகள் போற்றிய தக்ஷிணாமூர்த்தி திருவுருவத்தின் முன் நிற்கும் பொழுது எங்களையறியாமலே ஒரு அமைதி குடிகொள்கிறது.

இத்தகைய அழகிய திருவுருவங்களை ஆக்கக்கூடிய சிற்பிகள் தமிழ்நாட்டில் இன்றும் இருக்கின்றார்கள் என்பது தமிழர்கட்குப் பெருமையளிக்கக்கூடிய தொன்றாகும். பெண்கள் சாதாரணமாகத் தங்களை அழகு இராணிகளாக மதிப்பது வழக்கம். இந்த மனப்பான்மை இலக்குமிக்கும் இருந்ததாம். அழகிற் சிறந்தவள் தன்னைவிட வேறொருவர் இல்லையென்ற இறுமாப்பினால் முனிவர்களின் சாபத்துக்காளாகி மீண்டும் அம்பாளுடைய கடாட்சத்தால் தன் பழைய அழகைப் பெற்ற புராணக் கதையினைப் படியாதவர்களும் இந்தத் தேரிலுள்ள சித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் சிற்பி அமைத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணங்கி முனவரும் சோணங்கி முனிவரும் கூத்தாடுவதைப் பார்த்தல் யாருக்குத்தான் சிரிப்பு ஏற்படாது. இக்காலத்துக் கோமாளிபோலக் காட்சியளிக்கின்றார் முனிவர். போர்த்துக்கீசர் கோயிலின் மேலே தொப்பிகளுடன் நின்று கோயிலை இடிப்பதும், கோயில் தாறுமாறாக உடைந்து விழுந்தறுவாயிலிருப்பதும் மிக நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ள சிற்பத்தைப் பார்க்கும்பொழுது அழுகையும் கோபமும் கலந்து கிளம்புகின்றன. அருச்சுனன் நாக கன்னியைத் திருணஞ்செய்தல், ஆபுத்திரன் மணிபல்லவத்திலுள்ள கோமுகியில் அட்சயபாத்திரத்தை இடுதல், சோழ மன்னன் பீலிவளையை மணந்து அவளுடைய மகனுக்கு ஆதொண்டைச் சக்கரவர்த்திப் பட்டம் சூட்டுதல், நயினாப்பட்டர் அம்பாளைப் பூசித்தல், தேவி திருஞானசம்பந்தருக்குப் பால் ஊட்டுதல், அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் கொடுத்தல், அம்பாளை நயினாதீவு ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், மீகாமன் வெடியரசன் சண்டையிடுதல் ஆதியாம் சம்பவங்கள் தேரில் சித்திரிக்கப் பட்டுள்ளன. முறுக்கு மீசையுடனும் ஆயுதங்களுடனும் தோற்றமளிக்கும் வீரமுஷ்டியைப் பார்க்கும் போது எங்களை யறியாமலே வீரம் பிறந்துவிடுகின்றது.

## அம்பாள் அருள் பாலிக்கும் திறன்

தென்னிந்தியாவில் மரவேலைக்குப் பேர் பெற்ற இடம் நாஞ்சில் நாடு என்று தான் சொல்ல வேண்டும். நீலக்கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ் செய்யும் கன்னியாகுமரியை அடுத்த நாகர்கோயிலில் பரம்பரையாக மரவேலைத்தொழிலில் ஈடுபட்ட குடும்பங்கள் பல உள. அத்தகைய குடும்பமொன்றில் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரியார்தாம் நயினாதீவுத் தேர்த் திருப்பணியையும் நிறைவேற்றினார். நாகர்கோவிலைச் சேர்ந்த தாழக்குடியில் பிறந்து இளம் வயதிலே கல்விகற்று சித்திரப் பாடங்களிற் சித்தியெய்தினார். சித்திரமும் கைப்பழக்கமாதலால். குருசிஷ்ய முறையாக இந்த வேலையைக் கற்றுக்கொண்டார். பின்னர் 1924ஆம் ஆண்டிலே சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையில் திரௌபதையம்மன் கோவிலுக்கு ஒரு தேர் செய்தார். இதுவே இவர் முதன் முதலாகச் செய்து நிறைவேற்றிய தேராகும். பின்னர் இந்தியாவில் பல இடங்களில் கோயிற்றிருப்பணி செய்திருக்கிறார். நாகேஸ்வரி அம்பாளின் திருவருளினால் அவள் உலாப் போதற்குரிய சித்திரத்தேர்த் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் போதே அவருடைய சஷ்டியாப்த பூர்த்தி வைபவமும் அம்பாள் சந்நிதானத்திலேயே நிறைவேறியது. அம்பாள் அருள் பாலிக்கும் திறனை யாரறிவார்?

## தீர்த்தோற்சவம்

தேர்த்திருவிழாவுக்கு அடுத்த நாட் காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். நாகேஸ்வரி அம்பாள் நயினாதீவு மேற்கிலுள்ள தீர்த்தக் கேணிக்கு ஊர்வலமாக எழுந்தருளித் தீர்த்தமாடி பக்தர்களுக்கு காட்சி கொடுத்தருள்வது வழக்கம். அதன் பின்னர் பக்தர்கள் தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெப்போற்சவம்

தீர்த்தோற்சவத்துக்கு அடுத்தநாள் சாயங்காலம் நாகேஸ்வரி அம்மனுக்கு அபிஷேகம் சிறப்பாக நடைபெறும். அதன் பின்னர் பூசை நடைபெறும். இரவு தெப்போற்சவம் நடைபெறும். கோயிலுக்கு முன்னுள்ள கடலில் மூன்று தோணிகளை ஒன்றாகப் பிணைத்து அதன்மீது மேடை தயாரித்து அதன்மீது நாகேஸ்வரி அழகிய சப்பரத்தில் ஆரோகணித்து கொலுவீற்றிருக்கும் காட்சி அற்புதமானது. சப்பரம் முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்காரஞ் செய்யப்பெற்றிருக்கும். இந்தத் தெப்பம் கடலிலே மிதந்து அசைந்து வரும்பொழுது கடலிலே கோயில் ஒன்று மிதப்பது போல இருக்கும். இவ்வழகிய தெப்பம் கோயில் வலம்வரும் பாவனையில் பாலத்தையடுத்துச் சிறிது தூரஞ் சென்று திரும்பும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கடற்கரையில் நின்று இவ்வற்புதக் காட்சியைக் கண்டு தொழுது கண்ணீர் உகுப்பார்கள். கடலிலே தெப்போற்சவம் நடைபெறுவது இந்தக் கோயிலுக்குரிய சிறப்பு அம்சங்களுள் ஒன்றாகும்.

திருவிழாக்காலத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் சேவாசங்கத்தினரும் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அன்னதான சபையினரும், தம்பையா தாகசாந்தி நிலையத்தினரும் யாத்திரீகர்களின் உணவு, தண்ணீர் முதலிய வசதிகளை ஏற்படுத்தித் தொண்டாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமாலை சூட்டிய பாவலர்

இத்தகைய மகிமை பொங்கும் தலத்தின்மீது பண்டைக் காலத்தில் புலவர் பலர் தோத்திரப் பாடல்களும் பிரபந்தங்களும் இயற்றியிருத்தல் கூடும். அவையாவும் பேணுவாரின்றி மறைந்து விட்டன. நாகேஸ்வரி அம்பாள் மீது வண்ணைநகர் திரு. அமரசிங்கப்புலவர் அவர்கள் பாடிய "நயினை ஊஞ்சல்" 1880ம் ஆண்டு ஆடிமாதம் அச்சிடப்பெற்றுள்ளது. இவருடைய வரலாறு பூரணமாகத்தெரியவில்லை. நயினாதீவுத் தொடர்புடையவரோ என்பதும் தெரியவில்லை. இதன் பிரதியொன்றை எனக்குக் காட்டி அதனைப் பிரதிசெய்ய அனுமதி தந்த யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி நூல்நிலையப் பாதுகாப்பாளர் திரு. கே. செல்லையா அவர்களுக்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன். மிகவும் பிற்காலத்திலிருந்தவரும் அராலியிற் பிறந்து அனலைதீவு, நயினாதீவு, காரம்பன் முதலிய இடங்களில் வசித்தவருமாகிய வரகவி முத்துக்குமாரப் புலவர் நாகேஸ்வரிமீது ஒரு பதிகம் பாடியுள்ளார். பத்துச் செய்யுளும் விலைமதித்தற்கரிய பத்து வலம்புரிச்சங்கு எனக் கூறலாம். பத்து முத்தெனிலும் ஒக்கும். இருபதாம் நூற்றாண்டில் வரகவிப் புலவராக விளங்கிய நயினாதீவு நாகமணிப்புலவர் அவர்கள் நயினை நிரோட்டயமகவந்தாதி என்ற சிறந்த பிரபந்தத்தையியற்றி "கற்றாழைத் தண்டுக்குப் பித்தளைப் பூணிட்டது போல்" ஓர் உரையும் வரையத் துணிந்தது கற்றோர்க்கு நகைப்பையே உண்டாக்கும். ஆனால் அறிஞர்கள் என் வழுவுடை நூலைத் தழுவிடலின்றி உலகமாதாவாகிய ஸ்ரீ பரமேஸ்வரியின் திருநாமத்தின் பொருட்டு இதிற்றோன்றுங் குற்றங் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணந்தழீஇக் கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகின்றேன்" என்று புதியதொரு முறயில் அவையடக்கம் கூறி அந்நூலினை 1930ம் ஆண்டு வெளியிட்டார். இந்த வரகவியியற்றிய நயினைமான்மியம் எனும் மதிப்பிடற்கரிய தலபுராணம் இன்னும் அச்சுவாகனமேறாது கையெழுத்துப் பிரதியாகவே புலவர் அவர்களுடைய மகன் திரு. பொன்னுத்துரை அவர்களிடம் இருக்கின்றது. புலவர் அவர்களுடைய சகோதரர் தியாகர் என்பவர் மூலமாக 1936ம் ஆண்டளவில் சில பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தேன். அளவிறந்த ஞாபகசக்தியுடைய திரு. தியாகர் அவர்கள் நயினைமான்மியம் முழுவதையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தார். புலவருடைய தனிப்பாடல்கள் பலவற்றைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார். புலவர் அவர்கள் செம்மறியாடொன்றுக்குப் பாடிய சரமகவி எவர் மனதையும் ஈர்க்குந் தன்மையது. புலவர் அவர்கள் இயற்றிய நயினைமான்மியத்தின் சிறப்பினை எடுத்துக்கூற இது ஏற்ற சந்தர்ப்பம் அன்று. இந்தக் கலைக்களஞ்சியம் இதுவரை வெளிவராதிருப்பது பொதுவாகச் சைவமக்களுக்கும் சிறப்பாக நயினையம்பதியினருக்கும் ஒருபெருங்குறை யென்றே வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். இந்நூலின் கையெழுத்துப் பிரதியை என்னிடம் தந்த புலவர் மகன் திரு. பொன்னுத்துரை அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக. இவர்கள் இப்பொழுது காலஞ்சென்று விட்டார்கள். அவருடைய ஆன்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியடைவதாக.

பாரதியடியான் எனப் பாராட்டப்பெற்ற ஆசிரியர் திரு. ப. சரவணபவன் அவர்கள் 1909ம் ஆண்டிற் பிறந்து தமது 40 வயதில் மறைந்து விட்டார். தட்டுத்தடக்கின்றிக் கவிபாடும் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவுள்ளவர். வேலணை திரு. ம. தம்பு உபாத்தியாயர் அவர்கள் நயினை நாகேஸ்வரி பதிகமும், திருவிரட்டை மணிமாலையும் என்னும் பாடலை 1921ம் ஆண்டில் பாடியுள்ளார்.

நயினாதீவுச் சுவாமிகள், கவியோகி சுத்தானந்த பாரதியார்போன்ற மகான்களும் அம்பாளுக்கு அருட்பாமாலை சூட்டியுள்ளனர்.

இவ்வாறு நயினாதீவிலுள்ள புலவர்களும், அம்பாள் கடைக்கணோக்கம் பெற்ற பிறதேயப் புலவர்களும் நாகேஸ்வரிமீது பக்திச்சுவை நிறைந்த பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

(நயினை வரகவி நாகமணிப்புலவர் அவர்களின் "நயினை மான்மியம்" 2005ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# தோத்திரத்திரட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத் திரட்டு

## மனோன்மணி மாலை

மங்கல மணம்பரவ மலர்தலைக் காலைபோல்
மனமாய விருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமன வீறு தருவாய்
பொங்குதிரை யாழிபோல் என்னுளம் பூரிக்கப்
பொதுவேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்து சாந்தம் அளிப்பாய்.

செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்ய ஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருளாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக்காத்து அருள் அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம் சுத்த
சக்தியே போற்றி! போற்றி!

- யோகி சுத்தானந்த பாரதியார்-

## நயினை ஊஞ்சல்

### காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைத்த களிற்றின் பாதம்
கரம் பூத்த மலர் கொண்டே கருதி வாழ்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(2)

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந் துகண நாதர் புகழ் மாலை சூட்ட
அவிரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர் செய செயவென் றார்ப்ப
நகையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(3)

கொம்பினோடு துடிமுரசு முழவா மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர் வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண்ட லங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(5)

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலை முதலோ ராலஞ் சுற்ற
வேதியர் தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திசைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(6)

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத்தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கியாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(8)

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(9)

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

(10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில் குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய முமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ் நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி

(11)

ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப் புலவர்

## இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வழி சிவசமயம் வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறும்மும் மாரி வாழி
பசுக்குலம்வே தியர் தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர் வாழி
நீடாயு ளன்னசொர்ணம் நிறைந்து வாழி
ஏர்வாழி இராமசந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ.

## நயினாதீவு நாகேஸ்வரியம்மை பதிகம்

சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச்சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடர் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயிறைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர காரண ரூபரு பாதிசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந் தரிகௌரி நயினைமா நகர்க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே

1

சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில ளாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தழக மரகதக் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துருவமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவி னாலே
தெரிசிக்க வருடந்து நீடாயு ளும் பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினா
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பரமர் பாமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே

2

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகி
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமாக மானந்த வெள்ளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிந்தூ றுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற்கொரு சகோதரியென்ன வந்தருளும்
நாக பூஷணி நாரணீ இ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

3

சக்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளை பொன்னினம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசாம் பவி புவன கௌமாரி
நிமலைமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடி யவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி யெய்து நயி னாநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

4

ஆகமது கூனித் தளர்ந்து ரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங்கடமையிடர் நெளியவரு ஞமனெற்கு
விடுகயிறு முடுகியடுமுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும் நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினை நகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவி முனிவோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேசிவ
நாகஈஸ்வரி யம்மையே

5

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிருதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழ மதுமாரி சொரியுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

6

வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகர விழிவலை வீசியே
மின்கய மதன்சாலுள்ள விட்டடை துளபெரு
வெறுக்கையைப் பற்றி யேற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்னைமுன்
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றை வேண்டிச்சடில
நண்பு கொண்டிடு நஞ்சுமார்
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே

7

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவாசி வாய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தழுவு
மரியநவ சத்தி களொலா
மன்பினொடு தொண்டு செயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்த ருளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே

8

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
கைமலை முகத்த வுணனைக்
கால்கொண்டு தைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காத லணைமன் றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூவுலகு நீயா கையால்
சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ
தினந்தி னம்சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பி னால் வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நாகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

9

சீர்தங்கு தண்சுனை யெனச்சேர் மனத்திற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட டுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராச ரமெனும்
பேருயிர்க் ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருய வென்றுநயி
னாகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

10

- முத்துக்குமாருப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை மான்மியம்

## கடவுள் வணக்கம்

### பராசக்தி

வாலறிவோ ருணரமுத மத்தியிற்கற் பகஞ்சூழ்ந்த
மணித்தீபத்தின்
ஏலுறுநற் கடம்பமர் கொல்லையிற் சிந்தா மணிப்பீடத்
திருந்த தோற்ற
மாலுறுமெய் யடியவர்கண் டின்புறுவா னயினைதனின்
மணிப்பீடத்தில்
ஒலிடுகற் பனைகடந்தே யமர்நாக பூடணியென்
னுளத்த ளாமால்.

### மாணிக்கவாசக சுவாமி

எரியேறுந் திருநுதற்கண் ணிறையேறும் பசுநிறுவி
யிலங்கு வேதப்
பரியேறும் தொழில்படைத்துப் பகையேறு மீனவன்றன்
பதிக ளெல்லாம்
நரியேறுந் தொனிபரப்பி நதியேறும் சடைதனிலோர்
நங்கைக் காமண்
புரியேறும் படிவமுறக் கிடைத்தமணி வாசகர் தம்
பொற்றாள் போற்றி.

### அவையடக்கம்

எண்ணெ ழுத்தியல் யாப்பிலக்கணங்
கண்ண கத்தினுங் கண்டறி யேனிவட்
பண்ணு மிக்கவி பார்த்திடு மேலையோர்
திண்ண மிக்கணி செய்வர்நற் சிந்தையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமண்டலச் சருக்கம்

கேட்போர்தஞ் செவியரித்துப் பெரிதாக்கிக் கிலேசத்தா
லாட்போய வுளம்பிணித்தே யறிவூட்டு மமுதன்ன
சேட்போய வருணகிரி திருப்புகழ் மாலையினேத்துங்
காட்போய வேலனிருங் கதிரையுமுற் றுளதீழம்.

## ஸ்தல விசேடச் சருக்கம்

குலந்திகழ் வுறுமேழ் வரைகளும் மருங்கிற்
குலவுற நாப்பெணவ் வுயிருங்
கலந்திடு முமையோர் பங்கர் விற்றிருக்கும்
கயிலைமால் வரையது கடுப்ப
வலந்தரு மணலை யெழுவையே காரை மண்டை
வேலணையொடு புன்கை
பொலந்தரு நெடுவாஞ் சப்த தீபங்கள்
புடையுறப் பொலிவது நயினை

பவக்கடற் கிடைவீழ்ந் தலமருவோரைப்
பாதுகாத் தின்பமே பயக்கும்
சிவத்திடைப்படரும் பச்சிளங் கொடிதன்
திருப்பதத்துணை மலரெனவே
உவப்புறத் தனைச்சூ ழாழிமேல் நாவாயொழிதர
மறலி நோயுற்றுத்
தவிப்பவரயர் கைக் குறுபுணைமா னத்தங்
குமந்ந யினையாந் தலமே.

## மூர்த்தி விசேடச் சருக்கம்

எழுதருமறையுங் கடந்த நாயகி நன்றிருந்தருள்
செய்யு மத்தலத்திற்
பழுதறுஞ்சைவ தந்திரமுறையாற் பத்தியோடவ ளடிபரசி
யழுதகண்ணொடு மெய்யரும்ப நாத்தழும்ப
வகங்குழைந்தென் பெலாமுருகத்
தொழுதகையொடு நின்றனுதினம் போற்றுந்
தொண்டர்தம் பெருமையார் சொல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்த வேளருங்கைச் சிலையலர் கூம்ப
ஈன்றிடுங் கருப்பைகள் கூம்பப்
போர்த்ததீ நிரையக் குழிகள்வாய் கூம்பப்
புறச்சம யாந்தகங் கூம்ப
மூர்த்த மாயிருந்த கௌரி யாலயத்து
முன்புநின் றன்பொடு தலைமேற்
கூர்த்த நீடுரக் கை இவையெனா துயர்த்திக்
கூப்புவார் கைகளே கைகள்.

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்து
முதவலாலன்னை யெக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகொடுவானுந்
தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூடணியால்

-வரகவி க. நாகமணிப்புலவர்.-

## திருநாகதீபப் பதிகம்

பாரிலே தென்பூமி பாலிக்க வந்தநீ
பராமுகஞ் செய்வ துண்டேற்
பற்றெங் களுக்கியார் பெற்றதாய் தந்தைநீ
பரமகுரு நீ தெய்வ நீ
ஊரிலே நட்டாரு முறவுநீ யாபத்தி
லோம்பவரு முபகாரிநீ
உனையன்றி வேறெனக் குறுதியிலை
யூழா ரொறுக்கப் பொறுக்க கில்லேன்
சீரிலே கெட்டவென் பேரிலே நேரிலே
தேவிநீ யருளவாவா
செய்பிழை யனைத்தையுங் கைபிழை யெனக் கொண்டு
செம்மையா நோக்கருளவா
சாரிலே யோகினியை யாதியோர்பணி
செயுந்தையலே யானுய்யவே
சரணநா கேசுவரியே தயாநிதியே
சகம் போற்றுபெரு மாட்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கண்ட தெய்வநீயென் றுல கெலாமுதவு
காணிக்கையாம் பணிகளாற்
கண்மறைப்புண்டதோ வெம்பணியினார்
பணக்கவிப்பான் மறைந்ததுண்டோ
எண்கொண்ட பத்தரிடுவில்லசக
சிரமெலாமெதிரின் மலைபோற்குவிதலா
லெட்டியும்பார்க்க முடியாமையாய்
விட்டதோவிறு மாப்புவந்ததுண்டோ
பண்கொண்டகீத வொலியாற்செவிடு
மானதோபாவை யொலிமேலிட்டதோ
பாவியேன் படுதுயரமும் வேண்டுகோளு
முன்பால் வெறுப்பாக்கியனவோ
தண்கொண்ட முத்தமணிகங்கரீ யென்னிடைச்
சற்றுநோக் கருளுகில்லாய்
சரணநா கேசுவரியே தயாநிதியேசகம்
போற்றுபெருமாட்டியே

அரதனப்பன்மையின் மாற்றுயர் பசும்
பொன்னினணி முடியு மழுகொழுகும்
அரிய பொற்சுட் டியும் பிறையுமொவ்
வாதநுதலணியு மணிமுக்குத்தியும்
இருபரிதியென்ன வொளிர்கம்மலுந்
தோள்களினிலங்கு சாம்புன தவளையும்
இணையுமுன் கைகளிற்கங்கணமு
மணிவிரலிலங்கு மரியாழிவகையும்
பரிதிமுத லாவெண்ணு கோளெலா நாளெல்லாம்
படிமுறையி னண்ணு மதுபோற்
பளபளப்புறுமதா ணிகளு மேகலையு
மொண்பட்டுடையு மொட்டியாணமும்
சரியுஞ்சதங்கையும் பாடகமு மிளிர
வருடரவருங் காலமிதுகாண்
சரணநா கேசுவரியே தயாநிதியேசகம்
போற்றுபெருமாட்டியே

-வேலணையூர் ஶ்ரீ. ம. தம்பு உபாத்தியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி பஞ்சகம்

விண்ணிருந்து குண்டெறியும் வெறியர் கூட்டம்
வேரோடிப் புவியைவிட்டு மறைய வேண்டும்
அண்ணலார் காந்தி சொன்ன அஹிம்சா தர்மம்
அவனியை ஆள்பவருளத்தை ஆள வேண்டும்
மண்ணுலகில் சகோதரத்வம் மலிய வேண்டும்
மக்களெல்லாம் வறுமையின்றி வாழ வேண்டும்
நண்ணுவார் தமைக்காக்க நயினைமேவும்
நாகபூஷணி அருள் நீ பாலிப்பாயே!

சுத்தான்ம சித்தி பெற்ற துறவோர் மூலம்
சுத்த சமரச மார்க்கம் துலங்க வேண்டும்
தத்துவ ஞானியர் கூட்டந் தழைக்க வேண்டும்
தரணிமுற்றும் அடிமையின்றி வாழவேண்டும்
சத்தியமும் அன்பும் எங்கும் பரவவேண்டும்
சகஉயிரும் ஒன்றென்ற தகைமைவேண்டும்
பத்தருடன் முத்தர்களும் பணிந்து போற்றும்
பரம தயாபரி அருள் நீ பாலிப்பாயே!

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்
முனிவரர்க்குந் தேவர்கட்கும் முதன்மை யீந்தாய்
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமை யீந்தாய்
பேரின்பக் காதல் வளம் பெருக வைத்தாய்,
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்
இந்நாட்டைச் சொந்தமென்னும் இரு இனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்னாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுருவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதி சக்தியே! நின்
கருணையின்றி கணக்கிலாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லையென்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்பதுன்கடனாம் ஒப்பில் தாயே!

க. இராமச்சந்திரன்

(நயினாதீவு நாகபூஷணியம்மன் மீது நவராத்திரி தோத்திரமாக இயற்றப்பட்ட
இப்பஞ்சகம் அத்தேவி சந்நிதானத்தில் 26.9.57 வியாழக்கிழமை மாலை
சமர்ப்பிக்கப்பட்டது)

## நயினைத் தயால்

### கண்ணிகள்

வாருங்கள் வாருங்கள் பக்தர்களே - தாயை
வணங்கி வாழ்த்தித் துதித்திடுவோம்
சேருங்கள் சேருங்கள் பக்தர்களே - ஒன்று
சேர்ந்து பொற்தேரை யிழுத்திடுவோம்

கூடியே ஒன்றாக நின்றிடுவோம் - கரம்
கூப்பி அம்பாளை மன்றாடிடுவோம்
பாடி மகிழ்ந்து கொண்டாடி அனைவரும்
பக்தியாய்த் தேரை யிழுத்திடுவோம்.

அம்பாளின் செம்பாதம் கிட்டிடுவோம் - மன
தன்பாகத் தேர்வடந் தொட்டிடுவோம்
நம்பாலுறும் பவவெம்பிணி தீர - நம்
நாயகித் தேரை யிழுத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்முரசங்கள் அடித்திடுவோம் - தாயை
வாழ்த்திச் சங்கீதம் படித்திடுவோம்
ஊர்முழுதுங் கூடி எங்கள் நாகேஸ்வரி
ஊர்ந்திடுந் தேரை யிழுத்திடுவோம்

ஆலவட்டங்க ளெடுத்திடுவோம் - எம
தன்பான நெஞ்சைக் கொடுத்திடுவோம்
கோலமுடனிளம் வாலவயோதிபர்
கூடியே தேரை யிழுத்திடுவோம்

வெண்சாமரை கொண்டு வீசிடுவோம்- எங்கள்
வேதனையைத் தாய்க்குப் பேசிடுவோம்
எண்சாணுடம்பு இருக்குமட்டுந் தாயார்
ஏறிடுந் தேரை யிழுத்திடுவோம்

சந்தனங் குங்குமங் சாற்றிடுவோம் - நறுஞ்
சவ்வாது பன்னீரை ஊற்றிடுவோம்
பந்துசன ரொருமித்து வந்தே கூடிப்
பற்றியே தேரை யிழுத்திடுவோம்

கற்பூரத் தீபங்கள் காட்டிடுவோம் - இரு
கையைநீட்டி அருள் கேட்டிடுவோம்
அற்புதமாக அழகாக கேட்டிடுவோம்
ஆணிப் பொற்றேரை யிழுத்திடுவோம்

காணிக்கை நேர்த்தி கொடுத்திடுவோம் - செடில்
காவடி தோளி லெடுத்திடுவோம்
தோணித்துறைதங்கும் நாகம்மாள், தோன்றிடுந்
தூய பொற்றேரை யிழுத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகர்களும் - நாகம்மாவும்

### கண்ணிகள்

அம்மை எங்கள் அம்மையாம்
அருள் மிகுந்த அம்மையாம்
செம்மை யோடு எம்மைக் காக்கச்
சிவனார் தந்த அம்மையாம்

விண்ணில் வாழும் அம்மையாம்
வேதம் ஓதும் அம்மையாம்
மண்ணை யாளும் மன்னருக்கும்
மாதாவான அம்மையாம்

தேவர் போற்றும் அம்மையாம்
தேரில் வாற அம்மையாம்
ஆவலோடு எம்மை யன்பாய்
அரவணைக்கும் அம்மையாம்

கைலை வாழும் அம்மையாம்
கருணை காட்டும் அம்மையாம்
நயினை தீவில் வந்திருந்து
நன்மை செய்யும் அம்மையாம்

கந்தனுக்கும் அம்மையாம்
கணபதிக்கும் அம்மையாம்
எந்தனுக்கும் உந்தனுக்கும்
எல்லோருக்கும் அம்மையாம்

அம்மா அம்மா நாகம்மா
அருளாய் வந்த ஏகம்மா
அம்மா எம்முன் வருவாயே
அன்பாய்க் கருணை தருவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசப்பூக்கள் நாம் தருவோம்
வாய்க்கு இனிய பழந்தருவோம்
ஆனையோடே தமிழ் எமக்கு
அள்ளி யள்ளித் தருவாயே

கற்பூரங்கள் காட்டிடுவோம்
கையை நீட்டிக் கேட்டிடுவோம்
சற்பங் காட்டிக் கலைக்காமல்
சன்மானங்கள் தருவாயே

பாலுந்தேனும் தந்திடுவோம்
பாதம் பணிந்து வந்திடுவோம்
நாளும் பொழுதும் உனைப்போற்ற
நல்ல அறிவைத் தருவாயே

பட்டுத் துணியைச் சாத்திடுவோம்
பசுநெய்த் தீபம் ஏற்றிடுவோம்
குட்டி எம்மைக் கலைக்காமல்
கூர்மைப் புத்தி தருவாயே.

காவலூர்க் கவிஞன் ஞா. ம. செல்வராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகமைந்த தேரினிலே
## அருளீய வருவாய்

அருட்கவி மாமணி வே.செல்வநாயகம்

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
உனையடைய வருமடியார்க் குற்றதுணை யாகி
நிலவுபுகழ் வளர்நயினா தீவிலமர் தாயே
நின்பெருமை யாரறிவார் நிமலனவன் வாமம்
குவியமர்ந் தருளுதவிச் சமரசமும் காணக்
கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர்பெருகும் சித்திரங்கள் மிக்க
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

சிந்துபுடை சூழுமணி பல்லவமென் றின்னும்
சிறந்தமணித் தீவிதுநா கேஸ்வரமே யென்னும்
வந்தநயினாதீவு வளர்நாக தீபம்
வளமுதவும் பெயர்நாக பூஷணியே பல்பேர்
தந்தனைநீ தரிசிக்கத் தாயவளே யுன்னைத்
தஞ்சமென வந்தடைவார் தாமடைவர் பேறு
அந்தமுத சுரபிதரும் அம்பிகையே இந்த
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

தெங்குநிரை பிசுமத்தம் சேர்ந்தகுளிர் சோலை
சிந்துவழி படர்காற்றுச் சிந்தைமகிழ் வூட்ட
தங்குமிவண் அஞ்சலெனத் தானபயம் காட்டித்
தண்ணருளைத் தரும்நாக பூஷணியே தாயே
இங்குவரும் மக்களவர் எந்நாளும் வாழ்வர்
இறையவனும் சக்தியின்றேல் ஏதுசெய வல்லான்
அங்கணிசெய் மணியொலிக்க ஆனந்தமூட்டும்
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறவே குணகடலைக் கோபுரமும் பார்க்கும்
நினைப்பவர்கள் தொழுதேத்த நீளழகு சேர்க்கும்
சிலையெனவே பாம்பதுவும் பருந்ததுவும் காணச்
செய்தெமக்கு வழிகாட்டத் திருவிளமுங் கொண்டு
கலைதிருவைத் தந்தருளக் கட்செவிகொள் பீடம்
காணவமர்ந் திருக்கின்ற கன்னிகையே யம்மா
அலையாமல் இந்தமனம் அன்புசெய வேண்டி
அழகமமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

மணிசேரச் சிந்தொலிக்கும் ஓம்மென்ற நாதம்
மனக்கவலை நீக்குமுயர் மருந்தான வேதம்
பணிசேர ஏத்துமுன தடியாரின் கீதம்
பாரினிலே காணுமவர்க் கானந்த போதம்
துணிவுபெறத் திருவருளாய்த் துறங்கவரு சோதித்
தூமணியே உலகதனில் தோன்றுமருட் சக்தி
அணிதிகழ ஆனிவிழாப் பூரணையின் முன்னாள்
அழகமமைந்த தேரினிலே அருளீய வருவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

# புகைப்படங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நயினைத்தீவுச் சாமியார்" என்று அழைக்கப்படும்
திருப்பெருந்திரு முத்துக்குமாரசாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் பராக்கிரமபாகு காலத்துத்
தமிழ்க்கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைலாய வாகனத்தில் அம்பாள் வீற்றிருக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விராசாமி செட்டியாருக்கு
அம்பாள் நாகமாகத் தோற்றமளித்தல்



நாகபாம்பு புளியந்தீவில்
பூக்கொய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போர்த்துக்கீசர் நாகபூசணி அம்பாள்
கோயிலை இடித்தல்




போர்த்துக்கீசர் தேரைக் கண்ணுறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகிஷாசுரமர்த்தினி



ஆறதனில் மணல் குவித்து அரிய
பூசை செய்து அழகான காஞ்சியிற்
புகழாக வாழ்ந்திடும் அம்மை
காமாட்சியின் திருக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்
[ 1957 வெள்ளோட்டம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தேர்த்திருப்பணிச் சபையாரின் முதற்பிரதியைத் திரு. குமாரசுவாமி அவர்களுக்கு விற்கும் காட்சி. (மத்தியில் நிற்பவர்) கோயிற் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. எஸ். சிவஞானம், காரியாதிகாரி, சாவகச்சேரி



தவத்திரு குன்றக்குடி அடிகளார், வடமாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா, திரு. வே. சுந்தரம்பிள்ளை முதலிய பிரமுகர்களுடன் தேர்த் திருப்பணியைப் பார்வையிட்டனர் (17-03-1957).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. குல. சபாநாதன் தேர் திருப்பணிச் சபைப் பரிசிலைப் புதிய தேரினை செய்த திரு. எஸ். குமாரசுவாமி ஆசாரியார் அவர்களுக்கு வழங்குகின்றார். மத்தியில் நிற்பவர் பதிப்பாசிரியர் திரு. வே. கிருஷ்ணபிள்ளை அவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவுக்கு வடக்கே கடலில் அமைந்துள்ள கருடன் கல்




நயினாதீவுக்கு வடக்கே கடலில் அமைந்துள்ள பாம்பு சுற்றிய கல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே பார்வையில் பாம்பு சுற்றிய கல்லும், கருடன் கல்லும்



1957இல் நயினை நாகம்மாள் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
# நயினாதீவு
## தற்போதைய அறங்காவலர் சபை உறுப்பினர்கள்

1) **திரு.கா.ஆ.தியாகராசா** - **தலைவர்**
ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர்

2) **திரு.நா.யோகநாதன்** B.A. - **செயலாளர்**
ஓய்வுநிலை பெரும்பாக உத்தியோகத்தர்

3) **திரு.சோ.குமரகுரு** - **பொருளாளர்**
பிரதேச சபை உத்தியோகத்தர்

4) **பேராசிரியர் க.நாகேஸ்வரன்** Ph.D.J.P - **மரபுவழி அறங்காவலர்**
மொழித்துறை - சப்ரகமுவ பல்கலைக்கழகம்

5) **திரு.கு.சரவணபவானந்தன்** J.P., BA. - **மரபுவழி அறங்காவலர்**
ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி

6) **பேராசிரியர் மா.வேதநாதன்** Ph.D. - **அறங்காவலர்**
தலைவர், இந்து நாகரீகத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

7) **திரு.இ.பேரின்பநாதன்** - **அறங்காவலர்**
வருமான பரிசோதகர், பிரதேசசபை

8) **கலாபூஷணம் திரு.நா.கோபாலகிருஷ்ணன்** J.P - **அறங்காவலர்**

9) **திரு.பொ.பத்மநாதன்** - **அறங்காவலர்**
ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர்

10) **திரு.க.கனகேஸ்வரன்** - **அறங்காவலர்**
மத்தியஸ்தர் சபை உறுப்பினர்

11) **சிவத்திரு.கு.மகேசராசா** - **அறங்காவலர்**

12) **திரு.த.கோகிலராஜ்** - **அறங்காவலர்**
சமூகசேவையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவேகானந்தா அச்சகம், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org